# அல்லாமா முஹம்மது இக்பால்

## நூறும் ஆண்டு பிறந்த நாள் விழா



பாக்கிஸ்தானின் தத்துவ ஞானி, சிந்தனையாளர், கவிஞர்

*1877 — 1938*



அல்லாமா இக்பாலின் கையெழுத்தைக் காட்டும் படம்



லாஹூரிலுள்ள அல்லாமா இக்பாலின் அடக்கத்தலம்

# அல்லாமா டாக்டர் முஹம்மது இக்பால்

ஒரு சமுதாயத்திற்கு விடிவு காலம் தோன்றப் போகும் நேரத்தில் அது தன்னுடைய தாழ்வு நிலையையும் வீழ்ச்சியையும் முதலில் உணரத் தொடங்குகிறது. அந்த சமயத்தில், உறங்கிக் கிடக்கும் அச்சமுதாயத்தின் அங்கத்தவராய் உள்ள ஒருவர் விழித்தெழுந்தவராக, ''மணியோசை''யை எழுப்பி, அதுவரை அயர்ந்து உணர்வற்றுக் கிடந்த தனது பயணக் கூட்டத்தை உசுப்பி விட்டு, அதற்கு உணர் வூட்டி முன்னேற்றப் பாதையில் வழி காட்டி இட்டுச் சென்று அதனை முயற்சியிலும் ஆய்வி லும் தீவிர ஈடுபாடு கொள்ளச் செய்கிருர். இவ் விதமாகத் தான் அது நிகழ்ந்தது. ''ஒளி மிகு சமுதாய''த்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் உலகமுழுவதும் வாழும் முஸ்லிம்களைப் பீடித் திருந்த தேக்கம், அழிவு ஆகியவற்றின் அடை யாளங்களையும், அறிகுறிகளையும் தெளிவாகக் கண்டுணரத் தொடங்கியபோது, இஸ்லாமிய உலகின் ஒவ்வொரு பகுதியிலும் வழிகாட்டும் தலைவர்கள் தோன்றி, தம் அறிவுத் திறத் தாலும், கூரிய நோக்கினுலும் முன்னேற்றத்திற் குரிய சரியான பாதைக்கு சமுதாயத்தை அழைத்துக் கொணர்ந்து, அதன் செத்த நரம்பு களுக்குப்புத்துயிரூட்டி அவற்றில் புது ரத்தம் பாயச்செய்து, அதன் இலக்கை நோக்கி பீடு நடை போடச் செய்தனர்.

அல்லாமா டாக்டர் முஹம்மது இக்பாலும் அத்தகு வழிகாட்டும் தலைவர்களுள் ஒருவராக விளங்கியவர். அவரின் உளத்துன்பத்தை உணர்த்திடும் பாடல்களும் இதயப் புலம்பலாக ஒலித்த உணர்வுமயமான கீதங்களும் புத்துயி ரூட்டும் செய்தியும் இஸ்ராஃபீல் (அலை) 'சூர்' ஊதி எழுப்புவது போன்று, மரண மயக்கத்தில் கிடந்த மக்களை உயிர்த்தெழ வைத்து, உறைந்து கிடந்த அவரின் சமுதாயத்தவரின் உணர்வுகளுக்குச் சூடேற்றின.

இக்பாலின் முன்னோர்

இக்பாலின் மூதாதையர் கஷ்மீரி பண்டிதர் களுள் ஸப்ரூ கோத்திரத்தைச் சேர்ந்த கண்ணியமான ஒரு குலத்தவராவர்.

தம்முடைய தமையனர் ஷெய்கு அதா முஹம்மதுக்கு 5-10-25 தேதியில் இக்பால் எழுதிய கடிதம் ஒன்றிலே பின்வரும் சந்தோஷச் செய்தியைத் தெரிவிக்கிருர்:

''நீண்ட நாளாகத் தேடிய பிறகு நம் முன் னேர்கள் பற்றிய சில தகவல்கள் கிடைத் துள்ளன என்பதையறிய தாங்களும் பெருமதிப் பிற்குரிய நம் தந்தையாரும் மகிழ்ச்சியடை வீர்கள். கஷ்மீரைச் சேர்ந்த பிரபல மஷாயிகு களில் ஒருவர் ஹஜ்ரத் பாபா லோலி ஹஜ். குவாஜா ஆஜமின் ''கஷ்மீர் வரலாறு'' நூலில் அவர்களைப் பற்றிய சில தகவல்கள் தற்செய லாகக் கிடைத்துள்ளன. சங்கைக்குரிய நம் தந்தையார் அவர்கள் தமக்குப் பெரியவர்களிட மிருந்து கேள்விப்பட்டிருந்த செய்திகள் பொது வாக சரியானவையே. அவருடைய ஊர் லூச்சர் என்பது அல்ல. அட்வுன் வட்டத்தைச் சேர்ந்த சக்கூ என்பதே அவருடைய ஊர். பன்னிரண்டு ஆண்டு காலம் அவர் கஷ்மீருக்கு வெளியில் வாழ்ந்தார். பல நாடுகளிலும் சுற்றிக் கொண்டிருந்தார். அவருக்கும் அவ ருடைய மனைவிக்கும் இடையே சுமுகமான உறவு இல்லாமற் போனதாலேயே அவர் லௌகிக வாழ்க்கையைத் துறந்து கஷ்மீரை விட்டு வெளியேறிச் சென்ருர். திரும்பி வந்த போது அவரின் உள்ளத்தில் ஏற்பட்ட உதிப்பின் பலனுக ஹஜ்ரத் நூருத்தீன் வலீ அவர்களின் சீடரான ஹஜ்ரத் பாபா நஸ்ருத்தீன் அவர் களிடம் தீட்சை பெற்ருர். அவர் தம் எஞ்சிய வாழ் நாட்களை பாபா நஸ்ருத்தீன் அவர்களின் சகவாசத்திலேயே கழித்து காலம் சென்ற பின் தம் குருநாதரின் சமாதிக்கருகிலேயே அடக்கம் செய்யப் பெற்ருர்.

மேலும் தகவல்கள் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை இப்போது ஏற்பட்டுள்ளது. பாபா நஸ்ருத்தீனின் சந்ததிகள் கஷ்மீரில் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடும். அவர்களின் மூலமாக மேலும் செய்திகள் கிடைப்பது சாத்தியமே. அவர்களின் சிஷ்ய கோடிகளின் முழு வம்சா வளி அவர்களிடம் இருந்தாலும் வியப்படை வதற்கில்லை.''

இக்பாலின் முன்னோர்கள் பற்றி தெரிந்து கொள்ளும் முயற்சியில் பிரபல பாக்கிஸ்தானிய அறிஞரான மௌலவி முஹம்மது அப்துல்லா குறைஷி ஈடுபட்டு ஆராய்ச்சி நடத்தினர். அவர் கண்டறிந்தவற்றின் சாரம் இது :

''ஷெய்கு நூருத்தீன் வலீயின் கலீபாவான பாபா நஸ்ருத்தீனின் சீடர்களுள் ஒரு பெரியார் இருந்தார். அவரின் இயற்பெயர்என்னவெனத் தெரிந்து கொள்ள இயலவில்லை. எனினும் குவாஜா முஹம்மது ஆஜம் தீதா மர்ரீ எழுதிய ''வாக்கிஆத்தெ கஷ்மீர்'' (தாரீகெ ஆஜமி) என்னும் நூலின் 72-ஆம் பக்கத்தில் அவரைப் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளதாவது: அவர் பன்னிரண்டு ஆண்டுகாலம் கஷ்மீருக்கு வெளியே ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருந்தார்; நடந்து சென்றே பலமுறை ஹஜ்ஜு செய்தார். அதனல் அவரை லோல் ஹஜ் அல்லது ''லோலீ ஹாஜீ'' என்னும் பெயர் களால் அழைக்கலானர்கள். கோல்காம் மாவட்டத்திலுள்ள அட்வுன் வட்டத்தைச் சேர்ந்த சக்கூ என்பது அவரின் ஊராகும். இஸ்லாத்தைத் தழுவு முன் அவர் பிறப்பால் பிராமணராக இருந்தார். ஸப்ரு கோத்திரத்தைச் சேர்ந்த நிலக்கிழார்களுள் ஒருவர் அவர். இஸ்லாம் மார்க்கத்தை முதன் முதலில் ஏற்றுக் கொண்ட ஸப்ரு கோத்திரத்தவர்களின் மூலவர் களில் இவரும் ஒருவர். துறவு நிலையை மேற்கொண்ட பின் அவர் எல்லாவற்றையும் விட்டு விட்டு சரார் ஷரீபில் உள்ள தம் ஆன்மீக வழி காட்டியின் ஆஸ்தானத்திலேயே ஒட்டிக் கொண்டார். அதோடு மரணத்திற்குப் பிறகும் அங்கேயே ஷெய்கு நூருத்தீன் வலீயின் சமாதியுள்ள வளாகத்திலேயே, அவரின் குருநாதரான பாபா நஸ்ருத்தீனின் அடக்கத் தலத்திற்கருகிலேயே இடம் பெற்றூர்.

பாபா லோலீ ஹஜ்ஜின் பணியைத் தொடர்ந்த அவரின் பிரதிநிதிகளில் ஷெய்கு முஹம்மத் அக்பர் என்று ஒரு சூபி, நிறை வணக்கவாளியாகவும் உளத்தூய்மை பொருந்தியவராகவும் இருந்தார். அவர் பலமுறை பஞ்சாபுக்கும் விஜயம் செய்தார். அவரின் நற்குடிப் பிறப்பையும் நற்பண்புகளையும் அறிந்து அவருடைய குருநாதர் தம் மகளை அவருக்கு மண முடித்து வைத்தார். ஷெய்கு காலமான போது அவரே கலீபாவாக நியமனம் பெற்றூர்.

அவருடைய நான்காவது தலைமுறையைச் சேர்ந்த நான்கு சகோதரர்கள் அப்கானியரின் ஆட்சிக்காலத்தில் கஷ்மீரை விட்டுக் குடிபெயர்ந்து பஞ்சாப் சென்று அங்கு சியால் கோட்டில் குடியேறினர்கள். அவர்கள் ஷெய்கு முஹம்மத் ரம்ஜான், ஷெய்கு முஹம்மது ரஃபீக், ஷெய்கு அப்துல்லாஹ், இன்னுமொருவர் ஆகியோர் ஆவர். அவர்களின் தந்தையார் கஷ்மீரிலேயே தங்கி விட்டதால் அவருடைய நிலைமை குறித்து சியால் கோட்டில் இருந்த அவர்களுக்கு எதுவும் தெரிந்து கொள்ள முடியாமல் போயிற்று.

அவர்களுள் மூத்தவரான ஷெய்கு முஹம்மது ரம்ஜான் ''தஸவ்வுஃப்'' பற்றி பார்ஸியில் சில நூல்கள் எழுதினர். அதன் மூலம் ஸூஃபி மார்க்கத்தில் அவர் பெற்றிருந்த ஞானம் நன்கு புலனயிற்று. அவருக்கு மூன்று பெண் மக்களே இருந்தனர். ஆண் மகவு இல்லாததால் அவரின் சந்ததி அவரோடு முற்றுப் பெற்றது.

அந்த சகோதரர்களுள் இரண்டாமவரான ஷெய்கு முஹம்மது ரஃபீக் சியால்கோட்டில் துணி வியாபாரம் தொடங்கினர். அவரின் மூத்த மகன் ஷெய்கு நூர் முஹம்மதும் தம் தந்தையாருடனேயே கடையிலிருந்து வந்தார். அவர் தம் மக்களே ஷெய்கு அதா முஹம்மதும் அல்லாமா இக்பாலும் ஆவார்கள். ஷெய்கு முஹம்மது ரபீக்கின் இரண்டாம் மகனை ஷெய்கு குலாம் முஹம்மது நீர்ப்பாசனத் துறையில் ரூப்பர் என்னும் ஊரில் பணியாற்றிக் கொண்டிருந்தார். தம் மகனைக் காண ரூப்பர் சென்ற ஷெய்கு முஹம்மது ரபீக் அங்கேயே நோய்வாய்ப்பட்டு காலமானர். ஆகையால் இக்பாலின் பாட்டனரின் அடக்கத்தலம் ரூப்பரிலேயே அமைந்தது,

மூன்ரும் சகோதரர் ஷெய்கு அப்துல்லாஹ் சியால்கோட் மாவட்டத்திலுள்ள ஜைட்டேக்கீயில் குடியேறி வாழ்ந்து வந்தார். அவருடைய சந்ததிகள் பலர் ஹைதராபாத் சமஸ்தானம் சென்று விவசாயத் தொழிலில் ஈடுபட்டனர்.

நான்காமவர் பெயர் தெரியவில்லை. அவர் லாஹூரில் வாழ்ந்து குழந்தைகள் பெருமலேயே மரணமடைந்தார்.

இக்பாலின் தந்தையாருக்கு மூக்கு குத்தப் பட்டிருந்ததால் அவருக்கு ''ஷெய்க் நத்தூ'' என்ருெரு பட்டப்பெயரும் ஏற்பட்டிருந்தது.

வசீகரமான முகமும், நல்ல உயரமும் படைத்த அவர் நல்ல உடையணிந்து இனிய பண்புகளோடும் விளங்கினர். தொழிலில் ஈடு பட்டிருந்த போதிலும் எப்போதுமே சூபிகளுடனும், மார்க்க அறிஞர்களுடனும் சகவாசம் கொண்டிருந்ததால் ஷரீஅத், தரீக்கத் ஆகிய

இரு துறைகளின் நுணுக்கங்களையும் நுட்பங்களையும் நன்கு அறிந்து உணர்ந்து கொண்டிருந்ததோடு கற்றறிந்தோர் சபைகளில் பழகும் முறையையும் நன்கு பயின்றிருந்தார். தமக்கிருந்த ஈடுபாடு காரணமாக ஓரளவு எழுதவும் படிக்கவும் கூடக் கற்றுக்கொண்டார். ஞான மார்க்கத்தையும் ஆன்மீகப் பயிற்சிகளையும் தீவிரமாகக் கடைப்பிடித்தார். அல்லாமா இக்பாலின் ஆசிரியரான மவுல்வி மீர் ஹஸன், அவரைப் ''படிக்காத தத்துவஞானி'' என்று குறிப்பிடுவதுண்டு. இக்பால் பெற்றிருந்த கல்வி, விஞ்ஞான அறிவு, கவித்துவம், இலக்கிய மேதாவிலாசம் ஆகியவற்றுடன் அவர் தம் தந்தையாரின் ஆன்மீக மேதையும் சேர்ந்ததால் அவைகளெல்லாம் தீட்சண்யமடைந்தன. இக்பால், தம் தந்தையின் ஆன்மிக உயர்வைக் குறிக்கும் சுவையான பல சம்பவங்களைச் சொல்லிக் காட்டுவதுண்டு. குர்ஆன் மஜீதைப் பாராயணம் செய்வது லௌகிகம், மார்க்க ஒழுக்கம் ஆகிய இரண்டிலுமே வெற்றி பெற உதவும் என்று அவர் நம்பினார். அவர் எப்போதும் இக்பாலுக்கு பின்வருமாறு உபதேசம் செய்வார்.

''மகனே, பரிசுத்த குர்ஆன் உன்மீதே இறக்கப்பெற்றுக் கொண்டிருப்பதாக அல்லது அல்லாஹ்வே உன்னுடன் நேரில் பேசுவதாக நினைத்துக் கொண்டு அதை நீ ஓதிவர வேண்டும்.'' இக்பாலின் சுபாவத்தில் காணப்பட்ட உருகும் தன்மை குர்ஆனை ஓதி வந்ததாலேயே ஏற்பட்டதாகும்.

ஷெய்கு நூர் முஹம்மத் நீண்டநாள் வாழ்ந்திருந்தார். இக்பாலின் புகழையும் உயர்வின் உச்சத்தையும் தம் கண்களால் கண்டார். எண்பது வயதில் கண்களில் Cataract ஏற்பட்டதன் காரணமாக பார்வை மங்கி வந்தது. ஏறத்தாழ நூறு வயதை எட்டியவராக சியால்கோட்டில் 7—8—1930 அன்று அவர் இவ்வுலகை நீத்தார். இமாம் சாஹிப் கப்ருஸ்தானிலுள்ள அவருடைய சமாதிக் கல்லில் இக்பால் பின்வரும் தமது கவிதையைப் பொறிக்கச் செய்தார்.

''இக்பாலின் தந்தையும் குருவுமானவர் இவ்வுலகினின்று விடை பெற்றார். நாமனைவரும் பயணிகளே; அமரலோகமே நமது லட்சியம். 'உதிப்பூட்டும் அமரர்' இறைவனிடம் ''பிரிவு நாள் வாசகம்'' இரண்டு கேட்டார். ''கருணையின் விளைவு''[1] ''புதைகுழியின் அரவணைப்பு''[2] என ஒலித்தது ஒருகுரல்.

அதற்குப் பதினாறு ஆண்டுகளுக்கு முன் 9—11—1914-ல் இக்பாலின் அன்னையார் காலமான போது ''நீத்த அன்னையின் நினைவாக'' என்று, சோகம் ததும்பிய கவிதை ஒன்றை இக்பால் எழுதினார். அதைக்கண்ட கவிஞர் பெருமகனார் அக்பர் இலாஹாபாதீயும் இக்பாலுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் சில பாட்டுக்கள் இயற்றினார். இக்பாலின் இளமைப் பிராய வாழ்வைச் செம்மைப் படுத்தியதில் இக்பாலின் பெற்றோர் வகித்த பங்கு பற்றி அப்பாடல்கள் கோடிட்டுக் காட்டின.

''ஹஜ்ரத் இக்பாலிடம் காணப்படும் சிறப்புமிகு நற்பண்புகள் அனைத்தும், அவர் தம் நடை சமுதாயத்தைப் பற்றி ஈர்ப்பதும் அவரின் தன்னுணர்வும், இன்னுரையும், ஆன்மவியல் அறிவும், நட்புணர்வும், உயரிய பெருமைக்குரிய கௌரவமும், அவர்தம் பெற்றோர் உயரிய ஒழுக்க சீலர்கள், இறை நேசர்கள், ஞான மார்க்கத்தில் நின்றொழுகியோர், இறையுணர்வு பெற்றோர் என உணர்த்தும். அவரை வளர்த்து, வழிப்படுத்தி அவர்கள் ஆளாக்கியதை புலப்படுத்தும். அவர்களின் தோட்டம் தந்த இன்கனி அவரின் உயர் பண்பென சான்று பகரும். கண்ணீரையும், பெருமூச்சையும், புலம்பலையும் கட்டுப்படுத்த இயலாதே! பெற்ற அன்னை பிள்ளைக்கோர் ஒப்பற்ற பெருவரம் ஆயிற்றே! இக்பாலின் அன்னை இறையருளுக்கு இலக்காகி சுவனம் சென்று விட்டார். கண்கள் குளமாகின்றன, இதயம் துக்கத்தினால் கனக்கிறது! மதிப்புக்குரிய இக்பாலின் பெருந்துயரில் பங்கு கொண்ட அக்பரின் உள்ளம் துன்பவேதனை மிகுந்த பிரிந்த ஆண்டைப் பொறித்து வைக்க விரும்புகிறது. மெய்யாகவே அம்மாதர் திலகம் சமுதாயத்தின் எஜமானியாக இருந்தார். ''*ரிஹ்லத்தேமஃக்தூமா'' எனும் வாசகம் பிரிவு ஆண்டை புலப்படுத்தும்''.

அக்பர் இலாஹாபாதீ அவர்கள் இயற்றிய பின்வரும்நாலடிப் பாட்டே அப்பெருமாட்டியின் சமாதிக்கல்மீது செதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

இக்பாலின் சங்கைக்குரிய அன்னையார்
இறப்பெய்தினார்.
நிலையில்லா இவ்வுலகை நீத்து சுவர்க்கம்
சென்று விட்டார்
துயரத்தில் தோய்ந்த உள்ளத்துடன்
அக்பர் கூறுவது இது :
'ரிஹ்லத்தே மஃக்தூமா' அவரின் பிரிவு
ஆண்டாகும்!

1, 2. இவ்வாசகங்களுக்குரிய அரபி எழுத்துக்கள் ஒவ்வொன்றும் குறிக்கும் எண்களைக் கூட்டினால் இக்பாலின் தந்தையார் இறந்த ஹிஜ்ரீ ஆண்டான 1349 என்பது வரும்.

*மக்தூமா—எஜமானி. இவ்வாசகத்திலுள்ள அரபி எழுத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய எண்களைக் கூட்டினால் அவ்வம்மையார் இறந்த ஹிஜ்ரீ ஆண்டான 1333 என்பது வரும்.

மெய்யறிவு, இறையச்சம், இஸ்லாமிய ஒழுக்க முறைகள் ஆகிய நற்பேறுகள் நிறைந்த இத்தகு சூழலிலே வளர்ந்து செம்மையுற்று பண் பட்டவர் இக்பால். எனவே தான் அவர் தம் மகன் ஜாவீத் இக்பாலுக்கு வரைந்தனுப்பிய பாடல் ஒன்றில் பின் வருவது போன்றதொரு அறிவுரையைப் பார்க்க முடிகிறது:

நன்மார்க்கத்திற்கு நாசம் விளைவிக்கும்
காலம் இது.
நிராகரிப்பு அதன் அடிப்படையாக
அமைந்துள்ளது.
பார்வையையே சாட்டையாகப்
படைத்திருந்த போதகர்கள்
எவரும் இன்று பள்ளிக் கூடங்களில் இல்லை.
நீ எந்த குடும்பத்தின் குலவிளக்காய்த்
தோன்றியுள்ளாயோ
அதன் தன்மை மெய்யறிவைத்
தேடுவதாகும்.
உறுதி உன்னில் உண்டெனின் ஏழ்மையை
தேர்ந்தெடுத்துக் கொள்
ஹிஜாஸியத் துறவு முறையிலான அந்த
ஏழ்மையே நீ மேற்கொள்ளத் தக்கது.
நம்பிக்கை கொண்ட மூமினின்
சீமான்தனம் அதுதான்!
''அந்த ஏழ்மையை எனக்கு அளி'' என
இறைவனை இறைஞ்சிடு!

## இளமைப் பருவமும் கல்வியும்

கி. பி. 1877-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ஆம் நாளன்று சியால்கோட்டில் இக்பால் பிறந்தார்; ஒப்பற்ற மார்க்க மேதையான அல்லாமா அப்துல் ஹகீம் அவர்கள் பிறந்த தால் பெருமை பெற்ற தலம் அது. இக்பாலின் பிறப்பானது முஸ்லிம் சமுதாயத்திற்கு நற் காலம் பிறக்கப் போவதை முற்கூட்டி அறிவிக் கும் சோபனச் செய்தியாக இருந்தது.

தன் இதயக் குருதியைச் சிந்தவும்
தயங்காப் பெருவீரன் பிறந்துவிட்டான்
என்று காதல் குரல் எழுப்பியது.
கண்டுணரும் கண்கள் படைத்தவன்
தோன்றி விட்டான் என
நடுங்கியவாறு அழகு உரைத்தது.
இயற்கையோ, தானே ஆக்கவும், தானே
உடைக்கவும்,
தானே பார்த்துக் கொள்ளவும் வல்லவன்
ஒருவன்,
தன்னிச்சைக்கிணங்க இயங்க இயலா இம்
மண்ணிலிருந்தே
பிறந்துவிட்டானே என்று சஞ்சலப் பட்டது!

வேறு வார்த்தைகளில் சொல்வதாயின், அகிலத்தை வடிவமைத்தவன் மனிதனைப் படைத்திட்டபோது, ''இதோ மெய்க் காதலன் வந்து விட்டான். விசுவாசத்தை அறுவடை செய்வதற்காகத் தன் இதயத்தின் இரத் தத்தைக் கொண்டே பாசனம் செய்யக் கூடி யவன் இவன்!'' என்று காதல் குரல் எழுப்பிற்று.

'வெளிப் புலன்களுக்கு அழகாகவும் கவர்ச்சி யாகவும் தோற்றமளிக்கும் உருக்களுக்குப் பின் னுலுள்ள அழியும் தன்மையும், ஆதாரமின்மை யும் நிறைந்த கவர்ச்சியின்மையை, உற்று நோக்கி உய்த்துணரத் தக்க பார்வை படைத் தவனுக இருக்கப் போகிருனே இவன்' என்று அஞ்சி நடுங்கியது அழகு.

'இறைவனின் விருப்பத்திற்கு மட்டும் கட் டுப்பட்ட, தன் விருப்பப்படி இயங்க இயலாத, புகலற்ற பூதங்களாலான பூமியின் உயிரற்ற மண்ணிலிருந்து, தன் குணத்தாலும் செயலா லும் தன் விதியைத் தானே நிர்ணயித்துக் கொள்வதோடன்றி தன் அபரிமிதமான சக்தி யின் செருக்கினால் வசமிழந்து தன் உயிரின் சூத்திரத்தைத் தானே துண்டித்து தன்னையே அழித்துக் கொள்ளவும் கூடிய தன்னுரிமை பெற்ற மனிதன் தோன்றி விட்டானே' என்று இயற்கை சஞ்சலப்பட்டது. அதாவது, மனிதன் பூமியில் குழப்பம் உண்டு பண்ணுவான்; தன் கூர்த்த மதியின் துணை கொண்டு, தன் பூதவுட லின் இருள் திரைகளுக்குக்குள்ளே மறைந்து உயர்விற்கும், பரிணும வளர்ச்சிக்குமாகத் துடித் துக்கொண்டு கிடக்கும் சாத்தியக் கூறுகளைக் கண்டு கொள்வான்.

இரு சகோதரர்களையும் நான்கு சகோதரி களையும் கொண்ட குடும்பத்தில் எல்லாருக்கும் இளையவராக இக்பால் இருந்தார்.

பள்ளிகளில துவக்கக் கல்வி பயின்ற பிறகு சியால்கோட் ஸ்காட்ச் மிஷன் உயர்நிலைப்பள்ளி யிலிருந்து கி. பி. 1893-இல் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேர்வு பெற்றார் இக்பால். பிறகு அவர் ஸ்காட்ச் மிஷன் கல்லூரியில் சேர்ந்து பிறகலைகளைப் பயின்றதோடு ஷம்ஸுல் உலமா மவ்லானு ஸையித் மீர்ஹஸன் அவர்களிடம் பார்ஸியும் அரபியும் கற்றார். மவ்லானு அவர் கள் அரபி, பார்ஸி இலக்கண இலக்கியங்களில்

ஆழிய பாண்டித்தியம் பெற்றிருந்ததோடு இஸ்லாமிய ஞானம் நிரம்பியவராகவும், நேர்மையிலும் ஒழுக்கத்திலும் அப்பழுக்கற்றவராகவும் விளங்கினர். அவருடைய சகவாசத்தின் பலனைத் தான் ''தாப உணர்வு'' என்பது என்னவென இக்பால் அறிய முடிந்தது ; அவருடைய இயல்பிலே இயற்கையாக அமைந்திருந்த மேதை ஒளிரத் துவங்கியது. அவர் கவி பாடத் தொடங்கினர். அவருடைய வழிகாட்டி அவருக்கு ஊக்க மூட்டினர். அவரின் கவிதைகள் மிகக் குறுகிய காலத்திற்குள் அவர்தம் சகமாணவர்கள் பலரின் கவனத்திற்கு இலக்காயின. மகாகவி, ஃபஸீஹுல் முல்க் நவாப் மீர் தாக் தெஹ்லவீ அவர்களுடன் கடிதத் தொடர்பு கொண்டு தம் கவிதைகளை அவருக்கு அனுப்பி வைத்து அவற்றிற்கு திருத்தமும் அவைகளின் மீது கருத்தும் பெறத் தொடங்கினர். தம்மீது பரிவு காட்டி வந்த தம் ஆசிரியர்களின் அன்பையும் ஆதரவையும் என்றும் நினைவில் கொண்டிருந்தார். அதனலேயே, 1905-ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கு அவர், உயர் கல்வி பெறும் பொருட்டு, புறப்பட்ட போது, ''பயணியின் விண்ணப்பம்'' என்றொரு பாட்டெழுதினர். அதில் தமக்கு கல்வியும் ஒழுக்கமும் அருளப்பட வேண்டுமெனவும், பெற்றோரின் பாதங்களில் தம் தலையை வைக்க விருப்பம் தெரிவித்தும் பாடியதோடு, ஷம்ஸுல் உலமா மவ்லானு ஸைய்பித் மீர் ஹஸன் அவர்கள் மீது தமக்கிருந்த பேரன்பையும் பெருமதிப்பையும் பின்வரும் வரிகளில் வெளியிட்டார்.

ஹஜ்ரத் அலீயின் அந்தக் குலவிளக்கு !
அவர்தம் வீட்டு வாயில் எனக்கு பரிசுத்த
'ஹரம்' போன்றதாகும்,
என் ஆர்வத்தின் மொக்கு அவர் விருப்பினலேயே மலர்ந்தது !
அவரின் உன்னதத் தன்மைகளே என்னைப்
பண்பாளனுக்கின.
திரும்பிவந்து அவரை மீண்டும் தரிசித்து
மகிழ
வானங்களின் பூமியின் அதிபதி எனக்
கருள்புரிவானுக !

இதைப் போலவே வேறு சில கவிதைகளில் அவர், ஹஜ்ரத் தாக் தெஹ்லவீ, மவ்லானு ஷிப்லி நுஃமானீ, மவ்லானு ஹாலீ பானீபத்தீ, மவ்லானு கிராமீ ஆகியோரைப் புகழ்ந்துள்ளார்.

கி. பி. 1895-இல் சியால்கோட்டில் அவர் எஃப். ஏ. பரீட்சையில் தேர்வு பெற்ற பிறகு லாஹூர் அரசினர் கல்லூரியில் சேர்ந்து படித்து 1897-இல் பி. ஏ. பரீட்சையில் தேர்வு பெற்றூர். இங்குதான் அவர் பேராசிரியர் டாக்டர் ஆர்னல்ட் அவர்களிடம் தத்துவ சாத்திரம் பயின்றூர். இறைவனருளால் அவர் இயற்கையாகப் பெற்றிருந்த மதிக் கூர்மையும் தகுதியும் அப்போது தான் பெருமளவில் வெளிப்பட்டன.

பேராசிரியர் ஆர்னல்டு லாஹூர் வருமுன்பாக அலீகட் கல்லூரியில் பேராசிரியர் பதவி வகித்திருந்த காலத்தில் அவருடைய மேதை மவ்லானு ஷிப்லீயின் கவனத்தைக் கவர்ந்திருந்தது. இங்கு லாஹூரிலோ இக்பால் போன்றதொரு தகுதி வாய்ந்த மாணிக்கம் கிடைத்த போது அம்மாமணியைப் பட்டை தீட்டிப் பிரகாசிக்கச் செய்வதிலே அவர் மகிழ்ச்சி எய்தினர். அவர் நவீன தத்துவ சாத்திரம் மட்டுமன்றி அரபி இலக்கியத்திலும் இஸ்லாமிய ஞானங்களிலும் ஊறித்திளைத்திருந்தார். ''ப்ரீச்சிங் ஆஃப் இஸ்லாம்'' என்னும் புகழ் பெற்ற அவரின் நூல் அவருடைய மேதாவிலாசத்தை நன்கு புலப்படுத்துவதாகும். அவருடைய மேற்பார்வையின் கீழ் இக்பால் வெகுவாக முன்னேறினர். இக்பாலின் படிப்பாய்வுகளை அவர் உளப்பூர்வமாக மதித்து, அவரின் நுணுக்கமான கருத்துக்களைப் புகழ்ந்து, அவரைப் பெரிதும் ஊக்குவித்தார்.

அக்காலத்திலே தான் அசாதாரணமான நிகழ்ச்சி ஒன்று அவரின் உள்ளத்தை மிகவும் பாதித்தது. மவ்லவீ ஸாஹிப் ஒருவர், மார்க்க சட்டதிட்டங்களை நன்குணர்ந்தவர், எதிர்பாராத வகையில் இக்பாலிடம் ஒரு பொய்யுரை பகர்ந்தார். இக்பால் அதிர்ச்சியுற்று மன அமைதியிழந்தவராக பலநாள் வரை அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். படிப்பதையும் விட்டு, எவ்வகையான சிரத்தையும் இன்றி உற்சாகம் என்பதையே இழந்தவராக காணப்பட்டார். அவரின் நிலைபற்றி பேராசிரியர் ஆர்னல்டுக்குத் தெரியவந்தபோது அந்த நிலைக்கான காரணத்தை இக்பாலிடம் அவர் வினவினர். நடந்ததை விரிவாக விளக்கினர் இக்பால். மிகுந்த அனுதாபத்துடன் பேராசியர் ஆர்னல்டு அந்தச் சிக்கலை அவிழ்த்து விட்டார். அதோடு, ''வருங்காலத்தில் இது போன்ற எண்ணற்ற சந்தர்ப்பங்களை நீங்கள் சந்திக்க நேரிடும்'' என்றும் அவர் இக்பாலிடம் கூறினர். இதுபோன்ற சம்பவங்களினுல் இக்பாலின் இலக்கியமேதையின் புகழ் நெடுந்தூரத்திற்குப் பரவத் தொடங்கியது. ''இக்பால் போன்ற மாணவர்கள் ஆசிரியரை ஆராய்ச்சியாளராக ஆக்கி விடுகின்றனர்'' என்று பேராசிரியர் ஆர்னல்டு அவர்களே ஒருமுறை கூறினர். இவ்வாறு தமது புகழுக்கும் வெற்றிக்கும் காரண

மாய் அமைந்த அறிவுக்களஞ்சியமான தம் ஆசிரியருக்குத் தாம் கடமைப்பட்டிருப்பதையும், நன்றிக் கடன்பட்டிருப்பதையும் இக்பால் உளப் பூர்வமாக உணர்ந்திருந்தார். அதனுல் தான் பேராசிரியர் ஆர்னல்டு தம் வேலையை ராஜி நாமா செய்து விட்டு 1904 ஆம் ஆண்டு பிப்ரவரி 24-ஆம் நாள் புறப்பட்ட போது, இக்பால், ''பிரிவாற்ருமைப் புலம்பல்'' என்னும் தலைப்பில் பின்வருமாறு எழுதினுர்:

அகமே! உன்னில் குடியிருந்தவர் மேற்
திசை சென்று குடிபுகுந்து விட்டார்
ஆ! கீழ்த்திசை பூமி ஏனே அவருக்குப்
பிடிக்காமற் போயிற்று!
பிரிவு நாளின் பகலொளி நள்ளிரவின்
இருளுக்குக் குறைந்ததல்ல
எனும் கூற்றின் உண்மை எனக்கு இன்று
தெளிவாகி விட்டது!
அவரின் பிரிவு தந்த அடியால் புண்பட்ட
என் கண்ணுக்குள்,
அணைந்த மெழுகு வர்த்தியென, என்
பார்வை உறங்குகிறது.
என்னிதயத்துகள்கள் கதிரவனிடமிருந்து
ஒளிபெற இருந்தன;
உடைந்த கண்ணுடியில் உலகம் பிரதி
பலிக்க விருந்தது;
என் ஆசை யெனும் மரம் பசேல் எனத்
துளிர்க்க விருந்தது;
ஆ, யாரறிவார்? எப்படியிருந்தவன் எப்
படியாக விருந்தேன் என்பதை!
கருணை முகில் என் மலர்வனம் மீது சற்று
நின்று சென்று விட்டது,
என்னுசை மொக்குகளின் மீது ஒரு சில
துளிகள் மட்டும் உதிர்த்துச் சென்று
விட்டது
விதியின் முடிச்சுக்களை வெறியுற்ற கரங்கள்
அவிழ்த்து விடும்.
என்னைப் பிணைத்துள்ள பஞ்சாபின் தளைகளை
ஒடித்து அங்குப் போய் விடுவேன்
குழம்பிய என் கண்கள் உம் உருவப்
படத்தை நோக்குகின்றன
எனினும், உம் உரைக்கு ஏங்குபவனுக்கு
அமைதி எங்ஙனம் கிட்டும்?
சித்திரத்தின் உதடுகளுக்கு பேசும் சக்தி
இல்லையே
மௌனம் என்று சொல்கிருர்களே அது
தானே சித்திரம் பேசும் மொழி!

உண்மையில், அவர் பஞ்சாபின் தளைகளைத் தறித்துக் கொண்டு, தானே இங்கிலாந்து சென்றடையும் வரை நிம்மதியற்று மன அமைதி இழந்தவராகவே அவர் இருந்தார்.

புகழின் ஆரம்பம்:

லாஹூரில் அவர் வாழ்ந்து கொண்டிருந்த போது அவரின் கவிதைகள் மக்களுக்கு மத்தியில் பரவின. அவர் கவியரங்கங்களில் கலந்து கொண்டு தம் கவித்திறனை வெளிப்படுத்தினுர். அவரின் எண்ணப் போக்கில் சுயத்திறனும் புதுமையும் காணப்பட்டதால் அவருடைய கவிதைகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. ஒரு குறிப்பிட்ட கவியரங்கத்தில் பாடப் பெற்ற கவிதைகளிலேயே அவருடைய இந்த ஈரடிப் பாட்டு தான் மிகச் சிறந்தது" என்று மதிப்பிடப்பட்டது.

நாணத்தால் துளிர்த்தஎன் வியர்வைத்
துளிகளை
முத்தென ஏற்று எடுத்தது இறையருள்!

பின்பு, அன்றைய ரசனைக்கு ஏற்பவும், காலத்தின் தேவையை அனுசரித்தும் அவர் ஆங்கிலக் கவிதைகளையும் எண்ணங்களையும் உர்தூவின் உருவில் வழங்கத் துவங்கியபோது அவரின் இம்முயற்சி பெரிதும் வரவேற்கப் பட்டது.

அவருடைய படிப்பு முடிந்ததும் முதலில் லாஹூர் ஓரியண்டல் காலேஜில் மெக்லியோட் அரபிக் ரீடர் பதவியிலும் பிறகு லாஹூர் அரசினர் கல்லூரியிலும், இஸ்லாமியா காலேஜிலும் தத்துவப் பேராசிரியராகவும் ஆங்கிலப் பேராசிரியராகவும் நியமிக்கப் பெற்ருர். அக் காலத்தில் தான் அவர் ''இல்முல் இக்திஸாத்'' என்னும் தலைப்பில் பொருளாதார நூல் ஒன்று எழுதினுர். பொருளாதாரம் பற்றி உர்தூவில் எழுதப்பட்ட ஆதாரபூர்வமான முதல் நூல் அதுதான்.

எம். ஏ. பட்டத்திற்குப் படித்துக்கொண்டே அவர் கூடவே சட்ட வகுப்பிலும் சேர்ந்து பயின்ருர். எனினும் பரீட்சைத்தாள் ஒன்றில் மட்டும் அவர் தோற்ருர். 1901-இல் அவர் பஞ்சாப் எக்ஸ்ட்ரா அஸிஸ்டன்ட் கமிஷனர் போட்டித் தேர்வில் கலந்து கொண்டார். அவர் நல்ல உடல் நலத்துடனேயே இருந்தார் எனினும், வைத்தியப் பரீட்சையின் விளைவாக அவர் வேலை பெறத் தகுதி பெற்றவரல்ல என்று மெடிக்கல் போர்டு அறிவித்தது. இந்த அநீதியை எதிர்த்து சில பத்திரிகைகள் மிகக் கடுமையாக எழுதின. ஐரோப்பா சென்று பி. ஹெச். டி. க்கும் பாரிஸ்டர் பட்டத்திற்கும்

தயார் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை இந்தத் தோல்வி தான் அவரிடம் தோற்று வித்தது.

இக்கால கட்டத்தில் தான் இக்பால் லாஹூர் அஞ்சுமனே கஷ்மீரி முஸல்மானுன், அஞ்சுமனே ஹிமாயத்தெ இஸ்லாம் ஆகிய சங்கங்களின் வருடாந்தர விழாக்களுக்காக, அவருக்குப் பெரும்புகழ் ஈட்டித் தந்த சாகாவரம் பெற்ற பாடல்களை இயற்றிப் பாடினர்.

பிறகு, ''மஃக்ஸன்'' ஏட்டின் பக்கங்களில் அவரின் கவிதைகள் ஒவ்வொன்றுகத் தொடர்ந்து வெளிவந்து மக்களின் வரவேற்பைப் பெற்றன. ஹிந்துஸ்தானம் முழுவதுமே அவருடைய புகழ் எதிரொலித்தது. ''இக்பால் கா தரானு'' ''நயா ஷிவாலா'' இன்னும் அவை போன்ற தேசீயப் பாடல்கள் நாட்டிலே விழிப்புணர்வைத் தோற்றுவித்து அலைபாயச் செய்தன. சமூக விழிப்பையும் மறுமலர்ச்சியையும் தோற்றுவிக்க வந்தவர் எனவும் மெய்யை விளக்க வந்தவர் என்றும் அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

### படிப்பிற்காக மேற்கொண்ட பயணம்

1905 செப்டம்பர் 5-ஆம் நாள் இக்பால் இங்கிலாந்துப் பயணத்தை மேற்கொண்டார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தத்துவ சாத்திரத்தில் பட்டம் பெற்றார். பின்னர் ஐரோப்பா சென்று பல நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்த பிறகு ஜெர்மனியைச் சென்றடைந்தார். அங்கு ''பாரசீகத்தின் தத்துவ ஞானம்'' என்னும் தலைப்பில் ஆராய்ச்சியுரை எழுதிச் சமர்ப்பித்து ம்யூனிக் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் பட்டம் பெற்றார். ஜெர்மனியிலிருந்து திரும்பிச் சென்று லண்டன் ஸ்கூல் ஆஃப் பொலிட்டிகல் சயன்ஸில் சேர்ந்து தேர்வில் தனிச் சிறப்புடன் கூடிய வெற்றி பெற்று பாரிஸ்டர் ஆனர்.

இங்கிலாந்தில் அவர் தங்கியிருந்த காலத்தில் அவர்மீது பேராசிரியர் டாக்டர் மேக்டக்கார்ட் அவர்களின் செல்வாக்கு மிகுதியாக இருந்தது. மேக்டக்கார்ட்டின் தத்துவக் கொள்கை ஒரு தனிவகையான ஸூஃபித் தத்துவமாக இருந்ததென்றும் அவரின் அறிவுக்கு வெளிச்சமூட்டி அவர் இறைவனை உணர அது உதவியது என்றும் இக்பால் கருதினர். பேராசிரியர் நிக்கல்ஸன், பேராசிரியர் ப்ரௌன் ஆகியோருடன் இக்பால் ஆழ்ந்த நட்பு கொண்டார். அவ்விரு பேராசிரியர்களும் கீழைநாட்டு இலக்கியங்களில் ஆழிய பரிச்சயமும் நிபுணத்துவமும் பெற்றவர்கள். அவர்களின் நட்பின் மூலமாக அவருக்குக் கிடைத்த முதலாவது நல்ல பலன், பார்ஸி இலக்கியங்களையும் மற்றும் இஸ்லாமிய ஞானங்களையும் பற்றித் தெரிந்து கொள்ளவும் அவற்றைப் படிக்கவும் வாய்ப்புக் கிடைத்ததாகும். இரண்டாவதாக, இஸ்லாமிய நாகரிகத்தை மேலைநாட்டு நாகரிகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க முடிந்தது அவரின் கண்களைத் திறந்துவிட்டதாகும். மூன்றுவது, அவருடைய கல்வியறிவு மிக விசாலப் பட்டதும், சொல்லாட்சித் திறன் வலுவடைந்ததுமாகும். அதன் விளைவாக அவர் நவயுகக் கவிஞர் என்ற முறையில் ஒரே சமயத்தில் தலை சிறந்த கவிஞராகவும் வரும் பொருள் உரைப்போராகவும் விளங்கியதாகும். இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளைத் தாங்கி நிற்க உறுதிபூண்டு, அவருடைய உணர்வுகளையும் எண்ணங்களையும் வெளிப் படுத்துவதற்குரிய புதிய வழியைத் தேடத்துவங்கினர். முதலில் அவர் இயற்கையை நேசிக்க வேண்டும் என்னும் தத்துவத்தை போதிக்கத் தொடங்கினர். இயற்கையின் வெளிப்பாடுகளில் இறையொளியைக் காண முயன்றார். பிறகு மனிதனிலேயே இறைமையின் தன்மைகளைக் காணவும், காண்பிக்கவும் முயன்றார். நான்காவது பயன், பேராசிரியர் நிக்கல்ஸன், பிறகு அவருடைய ''அஸ்ராரே குதீ'' என்னும் மஸ்னவீயை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஐரோப்பா முழுவதிலும் அமெரிக்காவிலும் அறிமுகப் படுத்தியதாகும்.

இந்த இடத்தில் தான் இங்கிலாந்தில் இஸ்லாம் பற்றி இக்பால் சில சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். மார்க்க சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளில் ஆழிய ஞானம் படைத்தவர் அவர் என்ற புகழை அவை அவருக்கு ஈட்டித்தந்தன. சில மாதங்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு பேராசிரியர் நிக்கல்ஸன் எகிப்து சென்றபோது லண்டன் பல்கலைக் கழகம் அவருடைய இடத்தில் இக்பாலை ஆக்டிங் புரொபஸர் ஆக நியமித்தது.

### தாயகம் திரும்புதல்

பேராசிரியர் பதவியை ஆறு மாதம் வகித்திருந்த பிறகு இக்பால் ஹிந்துஸ்தானத்திற்குத் திரும்பினர். 1908 ஜூலை 27-ஆம் நாள் அவர் லாஹூர் போய்ச் சேர்ந்த போது லாஹூர் நகரப் பிரமுகர்கள் அனைவரும் திரண்டு வந்து அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளித்தனர். அவ்வாறு வரவேற்ற நண்பர்கள், பெரியவர்களுள் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இருந்தனர். இக்பால் பெருமகிழ்ச்சியுடன் அவர்கள் அனைவருடன் பேசிப் பழகினர். மேல்

நாடுகளுக்குச் சென்று படிதது விட்டுத் திரும்பு வோரிடம் வழக்கமாகக் காணப்பட்ட கர்வ குணங்கள் எவையும் இக்பாலிடம் காணப் படாததை அவர்கள் அனைவரும் நன்கு கண்டுணர்ந்தனர். அவர் மேல்நாடு செல் வதற்கு முன் அவரிடம் குடிகொண்டிருந்த எளிய பண்புகளே இப்போது அங்கிருந்து உயர் கல்விகற்றுத் திரும்பிய போதும் அவரிடம் காணப்பட்டன.

மேல் நாட்டிற்குச் செல்வதற்கு முன்பாக அவர் லாஹூர் அரசினர் கல்லூரியில் தத்துவ, ஆங்கிலப் பேராசிரியராக இருந்தார். வேலையை ராஜிநாமா செய்யாமலே, மேற்படிப்புக்காக லீவு எடுத்துக் கொண்டு சென்றிருந்தார். திரும்பி வந்த பிறகு அரசினர் கல்லூரிப் பேரா சிரியர் பதவியில் மீண்டும் பணியாற்றத் தொடங்கினர். எனினும் இப்போது கல்வி போதிப்பதோடு வக்கீல் தொழில் புரியவும் அவருக்கு அனுமதி கிடைத்திருந்தது. மாகாண அரசாங்கம் கேட்டுக் கொண்டதன் பேரில் இக் பால் ஆஜராகக் கூடிய வழக்கு எதுவாக இருப் பினும் அது மதிய உணவு வேளைக்கு முன்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படலாகாது என்று தன் கீழுள்ள நீதி மன்றங்களுக்கு உயர் நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இதிலிருந்து இக்பாலுக்கிருந்த முக்கியத் துவத்தை உணரலாம். எனினும் இரண்டு, இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகே அவர் தம் வேலையைத் துறந்து, தம் முழு நேரத்தையும் வழக்கறிஞர் தொழிலுக்குச் செலவிடத் தொடங் கினர். நண்பர்கள் காரணம் கேட்டபோது, ''நான் ஒரு பக்கம் சேவகம் செய்து கொண்டு, என்னுடைய கருத்துக்களை சுதந்திர உணர் வோடு வெளியிட முடியவில்லை'' என்று விடை யளித்தார். பாரிஸ்டர் தொழில் மூலமும் அவர் பெரும் பொருள் ஈட்ட விரும்ப வில்லை. தன் செலவுகளை ஈடுகட்டுவதற்குப் போதுமான வருமானம் தரக்கூடிய அளவுக்கு மட்டுமே வழக்குகளை அவர் ஒப்புக் கொண்டு வந்தார். அதற்கு மேல் வழக்குகளை ஏற்க அவர் மறுத்து விடுவார். இந்த கொள்கையை அவர் தமது மரணம் வரை மாற்றமின்றிக் கடைபிடித்து வந்தார்.

### கௌரவப் பட்டங்கள்

1920-ஆம் ஆண்டில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் நிக்கல்ஸன் இக்பாலின் பார்ஸி ஈரடிப் பாக்களாலான 'அஸ்ராரெ குதீ'யை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டதைத் தொடர்ந்து செயல் பற்றிய அவருடைய தத்துவக் கருத்துக்களைக் குறித்து பல ஐரோப்பிய நாடுகளில் கட்டுரைகள் பல வெளிவரலாயின. அவற்றின் மூலம் அவ ருடைய மேதாவிலாசம் மேலை நாட்டவர்க்குப் புலனாயிற்று. பிரிட்டிஷ் அரசாங்கமும் அதனை உணர்ந்து அவரைப் பெருமைப்படுத்தும் வகையில் 1922-இல் அவருக்கு ''ஸர்'' பட்டம் வழங்கிப் பாராட்டியது. ஹிந்துஸ்தானத்தின் பல்கலைக் கழகங்கள் சிலவும் அவருக்கு கௌரவ டி. லிட். பட்டங்களை வழங்கி தம் பெருமையைத் தாமே உயர்த்திக் கொண்டன.

### செயல்முறை அரசியல்

இக்பால் இயற்கையாகவே சுயேச்சை உள்ளம் படைத்தவராக இருந்தார். அரசியல், சமுதாய, தத்துவத்துறைகளில் சீர்திருத்தம் காண தம் வாழ் நாள் முழுவதையும் அவர் செலவிட்டார். தம் புத்துயிரூட்டும் கவிதை களின் மூலம் அவர் உலகினரை செயல்புரியத் தூண்டிக் கொண்டிருந்தார். ஆனால் தம்மைப் பொறுத்த வரையில் அவர் செயல் முறை அரசி யலில் ஈடுபடவில்லை.

இந்த அரசியல் சிக்கல்கள் உனக்கு மங்கள மாகட்டும்!
காதல் மிகுதியால் என் விரல்கள் உள்ளத் தைப் பிராண்டுகின்றன!

என்று அவர் பாடியபோதினும் கூட அவருடைய அரசியல் நுண்ணறிவு பல அரசியல் தலைவர்க ளுடையதைக் காட்டிலும் கூரியதாக இருந்தது. காயிதெ ஆஜம் முஹம்மது அலீ ஜின்னாஹ் அவர்கள், ''செயலூக்கம் மிக்க அரசியல்வாதி என்ற முறையிலும் கூட இக்பால் அசாதாரண மான தன்மை படைத்திருந்தார்'' என்று கரு தினர். இஸ்லாம் மார்க்கத்தின் இலட்சியத்தின் மீதும் அதன் ஒளிமயமான வருங்காலம் மீதும் அவர் பரிபூரண நம்பிக்கை கொண்டிருந்தார் ஆகையால், முஸ்லிம்கள் பெரும்பான்மை யினராக வாழ்ந்த இந்திய துணைக் கண்டத்தின் வடமேற்கு, வட கிழக்குப் பகுதிகளை ஹிந்துஸ் தானத்திலிருந்து பிரித்து, ஒரு தனி இஸ்லாமிய அரசாங்கத்தை உண்டு பண்ணுவதன் சாத்தியக் கூறுகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியிருந்த ஒரு சிலருள் அவரும் ஒருவராக இருந்தார். ''இக்பால் பெரிய உபதேசகர் தான்; பேச்சி லேயே வென்று விடுவார்! வாய் வீச்சில் பெரு வீரர் என்றாலும், செயல் வீரராக முடியவில்லை அவரால்!'' என்று அவரே பாடியிருந்ததை உணர்ந்திருந்தும் அவரின் உற்ற நண்பர் களும், அவரைக் கொண்டாடியவர்களுமான சிலர் ஒருமுறை அவரைக் கடுமையாக வற் புறுத்தி, பஞ்சாப் சட்டமன்றத்தின் உறுப்பின ராவதன் மூலம் நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் அவர் சேவை செய்ய முன்வர வேண்டுமென்று கூறி அவரைச் சம்மதிக்க வைத்தனர்.

1926-இல் நடந்த தேர்தலில் அவர் போட்டி யிட்டார். செல்வாக்கு மிக்கவர்களான இரு வேட்பாளர்கள் அவருக்கு ஆதரவாக போட்டி யினின்று விலகிக் கொண்டனர். எனினும் லாஹூரின் 'அராயீன்' குடும்பத்தைச் சேர்ந்த பிரமுகரான மலிக் முஹம்மதுத்தீன் என்னும் வேட்பாளரோடு அவர் தேர்தலில் மோத நேர்ந்தது. இக்பாலும், தம் விருப்பத்திற்கு விரோதமாக, ஓடியாடித் தேர்தல் வேலைகளில் ஈடுபட வேண்டியதாயிற்று. 1926 நவம்பர் 23-ஆம் நாளன்று தேர்தல் முடிவு வெளியா யிற்று. இக்பால் ஆயிரக்கணக்கான வாக்குகள் கூடுதலாகப் பெற்று அவருடைய வெற்றி உறுதியாயிற்று. முஸ்லிம்களின் உண்மையான பிரதிநிதி என்ற முறையில் அல்லாமா இக்பால் பஞ்சாப் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலில் அமர்ந்து அவரின் சக்திக்கேற்றவாறு பயன் மிக்க சேவை யாற்றினர்.

மதஸ்தாபகர்களின் மீது அவதூறு செய்யும், விஷமத்தனமான, இழிமுறையிலான தாக்குதல் களைத் தடுக்கும் வகையில் சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டுமென அவர் ஒரு தீர் மானம் கொண்டுவந்தார். 1927-இல் அத் தகைய சட்டம் ஒன்று நிறைவேற்றப் பட்டு இன்று வரை அது அமலில் இருந்து வருகிறது.

வாள் வைத்திருப்பதைத் தடை செய்த ''இந்திய ஆயுதச் சட்ட''த்தின் விதிமுறைகளி லிருந்து அதற்கு விதி விலக்கு அளிக்க வேண்டு மென்று அவர் கொண்டு வந்த மற்ெருரு தீர் மானமும் நிறைவேறியது. ''வாள்பெற்ற சுதந்திரம்'' பிரகடனம் செய்யப் பட்டபோது அவர் பின்வரும் கவிதையை இயற்றினர். அது ''ஜர்பெ கலீம்'' என்னும் அவருடைய கவிதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ளது.

''முஸ்லிமே, என்ருவது நீ சிந்தித்துப்
பார்த்ததுண்டா ?
எஃகிஞலான வீரவாள் எத்தகு பொரு
ளென்று ?
இறையேகத்துவத்தின் இரகசியங்களைப்
பொதிந்து வந்துள்ள பாடலின் முதலடியே
அது !
எனக்கோ அவ்வீரடிப்பாவின் ஈற்றடியின்
கவலைதான்
''எளிமை'' என்னும் வாளை அல்லாஹ்
உனக்கு அருள்வாஞக !
மூமினின் கரப்பிடியில் இந்த வாளும்
வந்துவிடின்
கதிகலக்கும் காலிதாகவோ, அடலேறு
அலியாகவோ ஆகிவிடுவான்.''
(ஜர்பெ கலீம் ப. 27)

மதுக்குடித் தீமையை அகற்றக் கோரி அவர் தீர்மானம் கொண்டு வந்த போதும், நிலத்தீர்வையை ரத்து செய்ய அல்லது குறைக்கக் கோரியும், வருமான வரிக்கும் நிலத்தின் மீதான வரிக்குமிடையிலான ஏற்றத் தாழ்வை அகற்றவும், நிலம் அனைத்தின் மீதும் அரசாங்கம் உரிமை கொண்டாடுவதைக் கை விடக் கோரியும் அவர் சட்ட மன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவுகள் சக்தி வாய்ந்தவை யாகவும், வாதத்திறமை மிக்கவையாயும், நெடிய பேச்சுக்களாகவும் அமைந்திருந்தன. எனினும், அவ்வழியில் நல்ல பலன்கள் எதுவும் கிட்டுவதில்லை என்பதை அவர் உணர்ந்திருந்த தால், அதையடுத்து, அத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவது என்ற எண்ணமே ஒரு பொழுதும் கூடாது என்று விட்டு விட்டார்.

**சென்னை சொற்பொழிவுகள்**

1928-இல் இஸ்லாம் பற்றி சில சொற் பொழிவுகள் நிகழ்த்துமாறு சென்னைக்கு அழைக் கப்பெற்ருர். டிசம்பர் இறுதியில் சென்னைக்குச் சென்று அங்கு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். சீரங்கப்பட்டணம் சென்று, முழுமையான 'மெய்ந் நம்பிக்கையாளன்'பற்றி அவர் கொண் டிருந்த கருத்திற்கியைந்தவர் என்று அவர் கருதிய டிப்பு சுல்தானின் சமாதிக்குச் சென்று 'ஜியாரத்' செய்தார். அங்கிருந்து ஹைதரா பாதுக்குச் சென்று அங்கும் சில உரைகள் நிகழ்த்தினர். எல்லா இடங்களிலும் அவருக் குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்பிதழ்கள் வாசித்துச் சமர்ப்பிக்கப் பட்டன. அச்சொற்பொழிவுகள் Reconstruction of Religious Thought in Islam (இஸ்லாமிய மார்க் கச் சிந்தனையின் புத்தமைப்பு) என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் நூலாக வெளிவந் துள்ளது. அதன் உர்தூ மொழிபெயர்ப்பும் வெளியிடப்பட்டிருக்கிறது. 1930-இல் அவர் அலாஹாபாதில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் லீகின் வருடாந்தர மாநாட்டிற்குத் தலைமை தாங்கினர். அதன் பிறகு முஸ்லிம் கான்பரன்ஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று அவர் சரியான வழிகாட்டி வந்தார்.

**வட்டமேஜை மாநாட்டில் பங்கு பெறல்**

1931-இல் இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் பங்கு பெறும் நோக்கத்துடன் இங்கிலாந்துக்குச் சென்ருர். அங்கிருந்து அவர் ரோமுக்கும் அடுத்து எகிப்துக்கும் விஜயம் செய்தார். பலஸ்தீனில் நடைபெற்ற இஸ் லாமிய உலக மகாநாட்டிலும் பங்கு பற்றினர். ரோமிலும் கெய்ரோவிலும் பல இலக்கிய, அரசியல் அமைப்புகளின் அழைப்பிற்கிணங்கி

பல சொற்பொழிவுகளை அவர் நிகழ்த்தினர். அவை யாவும் அனைவரையும் பெரிதும் கவர்ந்தன.

1932-இல் டாக்டர் அன்ஸாரி அவர்களின் அழைப்பினை ஏற்று காஜி ரவூஃப்பே இந்தியாவுக்கு வந்து, டில்லி ஜாமிஆ மில்லியா இஸ்லாமியாவில் ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தியபோது அவற்றிற்கு அல்லாமா இக்பால் அவர்கள் தலைமை தாங்கினர்.

அதே ஆண்டில் அவர் மூன்றுவது வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மீண்டும் இங்கிலாந்துப் பயணம் மேற்கொண்டார். திரும்பி வரும் வழியில் அவர் பழங்கால இஸ்லாமியச் சின்னங்களைக் காணும் பொருட்டு சுற்றுப் பிரயாணம் செய்தார். அப்பொழுது அவர் இயற்றிய ஓர் ஒப்பற்ற கவிதை ''மஸ்ஜிதெ குர்த்துபா'' என்னும் தலைப்பில் பிரசுரம் ஆயிற்று. அது அவரின் அமரத்துவம் பெற்ற சில பாட்டுக்களுள் ஒன்ருகும்.

### தனித்திருந்து வாழ்தல்

தமக்கு உழைக்கும் சக்தி இருந்த வரையில் இக்பால் பாரிஸ்டராகத் தொழில் செய்து, வந்த வருமானத்தைக் கொண்டு தம் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு வந்தார். நோய் வாய்ப்பட்டு தொழில் செய்ய முடியாத நிலையில் அவர் ஒதுங்கி, தனித்து வாழத் தொடங்கிய போது, ஸர் ராஸ் மஸ்ஊத் அவர்களின் முயற்சிகளின் பலனுக போப்பால் சமஸ்தானத்திலிருந்து, அவரின் சின்னஞ் சிறு குழந்தைகளின் பராமரிப்புக் கென்று, மாதந்தோறும் ஓர் உதவித் தொகை அளிக்கப்பட்டு வந்தது. அவர் இறந்த பின்பும் கூட அத்தொகை அக் குழந்தைகளுக்குத் தொடர்ந்து கிடைத்து வந்தது.

### நோயும், மறைவும்

அவர்தம் வாழ்வின் இறுதியாண்டுகளில் அவர் மிகவும் நோய்வாய்ப் பட்டிருந்தார். வந்துபோகும் நண்பர்களைக் கூட சரியாக அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவருடைய கண்பார்வை மங்கி விட்டிருந்தது. மூத்திரக்காயில் கல்லடைப்பு காரணமாகவும் அவர் அடிக்கடி வேதனைப் பட்டுக் கொண்டிருந்தார். 1934-இல் அவர் ஈதுத் தொழுகையை முடித்துக் கொண்டு வீடு திரும்பியதும் சர்க்கரையும் பாலும் கலந்த சேமியா பாயசம் சிறிது சாப்பிட்டார். அதனுல் அவருக்குத் தொண்டைப்புண் ஏற்பட்டு பேச முடியாமல் ஆகி விட்டது. நாட்டு வைத்தியம் ஆங்கில வைத்தியம் ஆகிய முறைகளில் எவ்வளவோ மருந்துகள் கொடுத்துப் பார்த்தும் எந்த சிகிச்சையினுலும் பலன் கிட்டாமல் போய் விட்டது.

1935-இல் அவருடைய மனைவி காலமானதோடு அவரின் நோயும் மேலும் கடுமையாயிற்று. 1938 ஏப்ரல் 20-ந் தேதியன்று, வியாதியின் கடுமையை அதற்கு மேலும் அவருடைய இருதயம் தாங்காது என்று தெரிந்து விட்டது. மரணத்திற்கு சிறிது முன்பாக அவர் கீழ்வரும் பாட்டைச் சொல்லி, தம் இறுதி நேரம் நெருங்கி விட்டதைத் தெரிவித்து விட்டார்:

சென்று போன இசை திரும்ப வரலாம்,
வராமலும் போகலாம்
ஹிஜாஸிலிருந்து வரும் தென்றல்
மீண்டும் வீசலாம், வீசாமலும் போகலாம்
இந்த ஃபக்கீரின் வாழ்க்கை முடியப்
போகிறது.
இரகசியமறிந்த மற்றுமொருவர் வரலாம்,
வராமலும் போகலாம்.

1938 ஏப்ரல் 23-ந் தேதி அதிகாலை ஐந்தே கால் மணிக்கு உதட்டில் புன்னகை தவழ அவர் உயிர்துறந்தார்.

அந்த நேரத்தில் அவர், அவரே இயற்றியிருந்த பின்வரும் பாட்டின் உருவகமாகத் தோற்றமளித்தார்:

மெய்யான விசுவாசியின் அடை
யாளத்தை உனக்குக் கூறுகிறேன்:
மரணம் வந்துறும்போது அவன் உதட்டில்
புன்னகை தவழும்!

### இக்பாலின் சமாதி

மாலை நேரம் 'ஜனஸா' எடுக்கப்பட்டது. லாஹுர் பாதுஷாஹி மஸ்ஜிதுக்கு வெளியில் படிகளுக்கு அருகாமையில் ஒரு மூலையில் அவர் நல்லடக்கம் செய்யப் பெற்ருர். சமாதியானது அவருடைய பெருமைக்குப் பொருத்தமானதாகவும் சுற்றிலும் உள்ள முகலாயச் சின்னங்களுக்கு இயைந்தவாறும் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப் பெற்றுள்ளது. அஃப்கானிஸ்தானத்தின் மன்னர் பிரத்தியேக அன்பளிப்பாக அனுப்பி வைத்த உயர்ந்த சலவைப் பளிங்குக் கற்பலகை அவருடைய சமாதிக் கல்லாக வைக்கப் பட்டுள்ளது. ''உள்ள உறுதியும் தீரமும் படைத்த மனிதர்கள் சென்று தரிசிக்கும் தலம்'' ஆக அச்சமாதி இலங்குகிறது. அதன் கூரையின் மீதுள்ள பளிங்குக் கற்களை அலங்

கரித்துக் கொண்டிருக்கும் கவிதைகளோ, அல்லாமா இக்பாலின் மூன்று தன்மைகளை— கவிஞர், சிந்தனையாளர், பேராசிரியர்—மிகத் தெளிவாக அறிவித்துக் கொண்டிருக்கின்றன. அதோடு, இக்பாலின் கண்ணோட்டத்தில் இக்பால் எப்படிப் பட்டவராகத் தோற்றமளித்தார் என்பதையும் அவற்றின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. மொத்தம் ஆறு பாட்டுகள் இடம் பெற்றுள்ளன. இரண்டு பாட்டுகள், இக்பாலைக் கவிஞர் என்ற முறையிலும், இரு பாட்டுகள் அவரை சிந்தனையாளர் என்னும் முறையிலும், மற்றும் இரு பாட்டுகள் அவரை ஆசிரியர் என்ற தன்மையிலும் காட்டுபவை.

கவிஞர் என்ற வகையில் அவரிடமிருந்து பெறப்பட்ட பணி இத்தகையது என்று அவர் வர்ணிக்கிறார்:

வசந்தத்தின் தென்றலெனப் பயன்பட்டது
என்மூச்சு;
புல்லையும் முல்லை மலராக்கிற்று என்
கண்ணீர்
செம்மணிநிறத்து மதுரசம் மதுக்
கிண்ணத்தை ஒளிரச் செய்வது போல்
பாலைவனப் பூவையும் மலரச்செய்தது
என் குருதி!

அதாவது, விதியினையாள்பவன் என் பாட்டுத் திறத்தாலே இளவேனிலின் பணியை நிறைவேற்றினான். என்னுடைய ஜனங்களின் மீது, என் சமுதாயத்தின் மீது இலையுதிர் காலம் வந்து கவிந்திருந்தது. என் கவித்திறனின் விளைவாக அது வசந்த காலமாக மாறியது. மரண களை நிலவிய இடத்திலே புத்துயிர் தோன்றியது. நான் சிந்திய கண்ணீரால், காய்ந்து கிடந்த புல்லும் கூட மீண்டும் பசுமை அடைந்த தோடன்றி, பூத்து முல்லை போல மணம் பரப்பவும் தொடங்கியது. (தாழ்வுற்று அடிமைப் பட்டுக் கிடந்த சமுதாயத்தை இவ்வாசகம் குறிக்கிறது) என் இரத்தக் கண்ணீரானது வாய்க்காலாக ஓடி பாலைவனப்பூவிற்கு (சமூகப் பேரமைப்பிலிருந்து ஒதுங்கி நம்பிக்கையிழந்து கிடக்கும் இஸ்லாமிய இளைஞனைக் குறிப்பது) நீர்பாய்ச்சி, அதனைச் செழிக்கச் செய்தது; எவ்விதமெனின், பார்ப்பவர்கள், இது முஸ்லிமின் முகத்தோற்ற மல்லவே, அழகிய பளிங்குக் கிண்ணத்தில் செந்நிற மது ததும்பி வழிவது போன்றல்லவா தோன்றுகிறது என்று எண்ணும் அளவுக்கு, சகோதர பாவத்தோடு, அதன் வற்றி உலர்ந்த நாளங்களில் புதுரத்தம் ஓடச் செய்து உயிர்த்துடிப்பை ஏற்படுத்தியது. அதன் செந்நிறம் காரணமாக செந்தணல் போலக் கனன்று, அறப்போர் புரிவதற்காக அதன் ஒவ்வோரங்கமும் துடித்துக் கொண்டிருப்பது போன்று அம்முகம் தோற்றம் வழங்கியது.

சிந்தனையாளர் என்ற முறையில்:

விண்ணுலகின் உச்சியில் உயர்ந்து
கொண்டே போகிறேன்;
வானவர் ஓராயிரம்முறை என்னைத்
தொடர்ந்திருக்கின்றனர்
புதியன காணும் பேரார்வமே மண்ணு
லான மனிதனுக்குப் பெருமை சேர்ப்பதென
வான்மதியும் விண்மீன்களும் தமக்குள்ளே
திரும்பத் திரும்பப் பேசுகின்றன.

அதாவது: இறைவனின் பேருளானது என் சிந்தனைக்கும் அறிவுக்கும் எந்த அளவு உயர்ந்து சஞ்சாரம் செய்யும் சக்தியை அளித்திருக்கிறது எனின் நான் வானங்களையெல்லாம் கடந்து மேலே சென்று இறையண்மையையே எட்டி விடுகிறேன். வானவர்களும், இவன் எங்கு போகிறான் என்று ஆயிரம்முறை வேவு பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவன் எங்கு போய் நிற்கப் போகிறான். நாம் சென்றடைய முடியாத அந்த இடங்கள் எவையெவை என்று அறிய அவர்கள் விழைகின்றனர்.

எந்த எல்லையை எட்டினால் வானவர்களின் சிறகுகளும் கூட எரிந்து விடுமோ அந்த ‘மகாமெ மஹ்மூத்’ எனும் தலத்தை, மண்ணிலிருந்து படைக்கப் பெற்ற மனிதன் சென்றடைவது, அவனுடைய எண்ணங்களில் புதுமை, புதியன தோற்றுவித்தல், புதியன கண்டுபிடித்தல் ஆகிய பண்புகளினால்தான். சூரியனும் சந்திரனும், நட்சத்திரங்களும், வெகு உயரத்தில் வெகு பிரகாசமாய் அமைந்து தோன்றிடினும், அவையாவும் சக்தியற்ற படைப்பினங்களே, அவை தோற்றுவிக்கப்பட்ட வேளையில் எந்தெந்தப் பாதையில் செலுத்தப் பட்டனவோ அவற்றிலேயே தான் அவை சஞ்சரிக்கின்றன. மறுமை நாள் வரையிலும் அப்பாதைகளை விடுத்து இப்படியப்படி நகராமலே அவை சென்று கொண்டிருக்கும். மண்ணில் வாழ் மனிதனுக்கு மட்டுமே முன்னேற்றமும் பரிணமமும் பெறும் வாய்ப்பு வழங்கப் பெற்றுள்ளது. மெய் விளக்கமும் ஆன்ம ஒளி பெறுதலும்கூட அவனிடம் ஒப்படைக்கப் பெற்றுள்ளன, ஆனால் ஒரு நிபந்தனையோடு. அதாவது, இவ்வருட் கொடைகளிலிருந்து பலன்பெறுவதற்கான நேரிய ஒழுக்கங்களையும் வழிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும், செயலற்று, ஊக்கமற்றுக் கிடக்கக்கூடாது. புதியன காண்பதாலும் புதுமையைத் தோற்றுவிப்பதாலுமே முழுமையடைய முடியும்.

போதகர் என்ற வகையில்:

மூஸாவின் கரம் இப்போதெல்லாம்
சட்டைக்கையினுள் மறைந்து கிடப்பதால்
என் உள்ளத்து விளக்கையே
ஏற்றிக் கொண்டு விட்டேன்
நெற்றி நிலம்பட வந்து வணங்கிடு,
ஏழைமை காலத்தில்
நம் முன்னோர் செய்ததுபோல்
மன்னர்களின் நட்பை மதிக்காதிரு!

பிர்அவ்ன்களின் ஆணவத்தையும் அவர்களின் மாயா ஜாலங்களேயும் தம் ''ஒளிபொருந்தியகரம்'' கொண்டும் முஃஜிஸாத் என்னும் அற்புதங்களாலும் வீழ்ச்சியுறச் செய்த இறை தூதுத்துவம், முஹம்மது (ஸல்) அவர்களின் பணி துவங்கியதோடு முற்றுப்பெற்றது. இப்போது அது குர்ஆன் ஷரீபின் உருவில் உயிர் வாழ்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. பிர் அவ்னிய அகம்பாவ சக்திகள் தலைதூக்கும் போதெல்லாம், அது எந்த உருவில் வெளிப்படினும் சரி, திருக்குர்ஆனின் உயிரூட்டமுள்ள அற்புத சக்தி அதனை ஒடுக்கிவிடும். அந்தகாரமும் அடிமைத்தனமும் மிகுத்துள்ள இக்காலத்தில் சமுதாயத்தின் முன்னால் விளக்கு போன்றதொரு வெளிச்சத்தைத் தான் காட்டியிருக்கிறேன். அதுவும் கூட இறைதூதுத்துவத்தின் ஒளிக்கரம் ''சட்டைக் கையினுள் மறைத்து'' வைக்கப்பட்டு இருப்பதாலே தான். அகிலத்திற்கே ஒளியூட்டும் முஹம்மது (ஸல்) அவர்களின் தூதுத்துவம் உலகின் மீது பிரகாசிக்கத் தொடங்கிய பிறகு, அவர்களைப் பின்பற்றி யொழுகுபவனை, அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவனை நான் அவர்களின் தூதுத்துவம் போதித்த போதனைகளைத் தவிர்த்து வேறு வகையாக போதிக்கவோ, அழைப்பு விடுக்கவோ எனக்கேது துணிவு?

இணைதுணையற்ற ஏக நாயனின் முன் மீண்டும் 'ஸஜ்தா'வில் சிரம் வைத்து, அவனின் ஏகாதிபத்தியத்தை முழக்கி அவன் அளித்த பூரண மார்க்கத்தை அணுவளவும் பிசகாமல் முழுமையாகப் பின்பற்று; உலகில் தன்னிச்சையாகச் செயல்படும் ஆட்சியாளர்களின் கையை எதிர்பார்த்துக் கொண்டிராதே என்பது தான் நான் உனக்களிக்கும் அறிவுரை. 'ஏழைமைக் காலம்' எனும் 'நல்வழி பெற்ற கலீஃபா'க் களின் காலத்தில், நம் முன்னோர் இத்தகைய நேரிய பாதையையே மேற்கொண்டிருந்தனர். இவ்வழியைக் கடைப்பிடித்தே வல்லமை மிக்கவர்களையும் வெற்றி கொண்டனர். அல்லாஹ்வின் படைப்புகளின் மீது மிருக பலம் கொண்டு ஆதிக்கமும் ஆட்சியும் செலுத்தியவர்களுக்கு, ''அகில உலகிற்கும் அல்லாஹ்வே அதிபதி'' என்னும் உண்மையைப் புகட்டினர்.

## தனிப்பண்பும் குணநலன்களும்

இக்பால் தம் வாழ்நாள் முழுதும் எளிய வாழ்க்கையே வாழ்ந்து வந்தார். தன்மான உணர்வு, போதுமென்ற உள்ளம், பற்றற்ற தன்மை, மாண்பு ஆகியவற்றின் உயிர்ப்புள்ள உதாரணமாகத் திகழ்ந்தார். அவர் யாரிடமும் எதையும் கேட்டுப் பெற்றதுமில்லை. அவர் யாருக்கும் எதற்காகவும் கடன்பட்டவராகவும் இருக்கவில்லை. அவர் இருந்த இடத்திற்கு யாரும் வந்து போகலாம். தாழ்ந்தவர், உயர்ந்தவர்; செல்வர், எளியவர்; தெரிந்தவர், அறிமுகமில்லாதவர், யாரும் தங்கு தடையின்றி வரலாம், போகலாம். முஸ்லிம் இளைஞர்களைச் சந்திப்பதில் அவர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். தம்முடைய உள்ளத் துடிப்புகளை அவர்களின் இதயங்களுக்கு மாற்றிவிடுவது சாத்தியமாக இருந்திருப்பின் அவர் அவ்வாறே செய்திருப்பார். இஸ்லாம் சத்திய மார்க்கம் என்னும் அவரின் உறுதியான நம்பிக்கையும், இஸ்லாமிய சமுதாயத்தைப் பற்றிய அவருடைய விசாரமும் அவரின் நாடி நரம்புகளிலெல்லாம் ஊடுருவியிருந்தன. அவர் தம் சிந்தனைக் கருத்துகளில் காணப்படும் பெருவளம் போன்று இஸ்லாமிய இலக்கிய வரலாற்றில் வேறெங்கும் காண்பது மிக அரிது.

## இக்பாலின் மக்கள்

இக்பால் மூன்று திருமணங்கள் செய்தார். முதல் மனைவி மூலம் பிறந்த ஜனுப் ஆஃப்தாப் இக்பால் பாரிஸ்டராக இருக்கிறார். ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. எனினும் நுண்மதி படைத்திருந்த அச்சிறுமி பத்துப் பன்னிரண்டு வயதிற்கு மேல் வாழவில்லை. அவரின் இரண்டாம் மனைவி பிரசவத்தின் போது இறந்து போனார். அப்போது பிறந்த பெண் குழந்தையும் மிகச் சிறு பிராயத்திலேயே மடிந்தது. மூன்றாம் மனைவி மூலம் பிறந்த இரு குழந்தைகள் ஜாவீத் இக்பாலும் முனீரா பானுவும் ஆவர்.

ஜாவீத் இக்பால் இப்போது டாக்டர் ஜாவீத் இக்பால் ஆகி லாஹூர் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருக்கிறார். முனீரா பானு மண முடித்துக் கொடுக்கப் பெற்று, தம் கணவருடன் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார்.

## அவரின் படைப்புகள்

அல்லாமா இக்பால் உர்தூ, பார்ஸி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நூல்

களியற்றி, தம் நினைவுச் சின்னங்களாக விட்டுச் சென்றிருக்கிருர். அவற்றின் விவரமாவது :

உர்தூ

'இல்முல் இக்திஸாத்,' 'பாங்கெ தரா' 'பாலெ ஜிப்ரீல்', 'ஜர்பெ கலீம்' என்பவற்ருேடு 'அர்முகானெ ஹிஜாஸ்' என்னும் தொகுப்பிலுள்ள சில உர்தூ கவிதைகளும்.

ஃபார்ஸி

'அஸ்ராரெ குதீ', 'ருமூஸெ பேகுதீ' 'பயாமெ மஷ்ரிக்', 'ஜபூரெ அஜம்' ('குல்ஷனெ ராஸெ ஜதீத்', 'பந்தகீ நாமா' ஆகியவையும் சேர்ந்தது) 'ஜாவீத் நாமா', 'பஸ் செ(ஹ்) பாயத் கர்த் அய் அக்வாமெ ஷர்க்' ('மஸ்னவீ முஸாஃபிர்' சேர்ந்தது) 'அர்முகானெ ஹிஜாஸ்' (இதில் ஃபார்ஸி, உர்தூ ஆகிய இருமொழிக் கவிதைகளும் சேர்ந்துள்ளன.)

ஆங்கிலம்

'ஃபாரசீகத்தில் தத்துவ விசாரணையின் வளர்ச்சி', (The Development of Metaphysics in Persia)

'இஸ்லாத்தில் மார்க்க சிந்தனையின் புத்தமைப்பு' (The Reconstruction of Religious Thought in Islam)

'முஸ்லிம் சமுதாயம் பற்றிய சமூகவியல் ஆய்வு' (A Sociological Survey of the Muslim Nation), 'இஸ்லாமிய கிலாபத்' (The Islamic Caliphate).

1. ''இல்முல் இக்திஸாத்.''—பொருளாதாரம் பற்றி உர்தூவில் எழுதப்பட்ட முதல் ஆதாரபூர்வமான நூல் இது. சில ஆண்டுகளுக்கு முன்பாக அது மீண்டும் அச்சிடப்பட்டு இப்போதும் கிடைக்கிறது.

2. ''ஃபாரசீகத்தில் தத்துவ விசாரணையின் வளர்ச்சி.''—அல்லாமா இக்பாலுக்கு இந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்காகத் தான் Ph. D. (டாக்டர்) பட்டம் வழங்கப் பெற்றது. மூல ஆங்கில நூல் 1908 - இல் வெளியிடப்பட்டது. ''ஃபல்ஸஃபயெ அஜம்'' என்ற பெயரில், மீர் ஹஸனுத்தீன், B. A., LL. B., (Osmania) அதனை உர்தூவில் மொழி பெயர்த்தார். இக்பால் தாமே எழுதியுள்ளபடி :

''வருங்காலத்தில் பாரசீக தத்துவ விசாரணை வரலாறு வரையப்படுவதற்கு அஸ்திவாரம் அமைப்பதே இந்த ஆராய்ச்சியின் நோக்கம் என்பது வெளிப்படை. வரலாற்று அடிப்படையிலான ஓர் ஆய்வுரையில், மூலாதாரமான சிந்தனைகளை எதிர்பார்க்க முடியாது எனினும் பின்வரும் இரு விஷயங்கள் கவனிக்கப் பட வேண்டியவை என்பது என் துணிபு :

(அ) பாரசீகச் சிந்தனையின் தர்க்க ரீதியான தொடர்நிலையைத் தேடி ஆய்ந்து அதனை இக்கால தத்துவ சாத்திர வழக்கில் எடுத்தளிக்க முயன்றிருக்கிறேன்.

(ஆ) ஸூபித்துவத்தை பெருமளவில் விஞ்ஞான அடிப்படையில் விவாதித்துள்ளேன். அதோடு அவ்வியத்தகு நிலையினைத் தோற்றுவிப்பதற்கு அடிப்படையாகத் திகழ்ந்த அறிவார்ந்த நிலைகளையும் சுட்டிக் காட்ட முயன்றிருக்கிறேன். ஆகையால், பொதுவாக ஒப்புக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கு மாற்றமாக, ஸூஃபித்துவம் என்பது, உறங்கிக் கிடக்கும் ஆன்மாவை எழுப்பிவிட்டு உயர்வான ஆன்மிகப் படித்தரத்தை நோக்கி அழைத்துச் செல்ல வல்ல பல்வேறு அறிவுப்பூர்வமான, தார்மிக சக்திகளின் இயக்கத்தின் இன்றியமையா விளைவே என்பதை நான் நிலை நாட்ட முயன்றிருக்கிறேன்.''

3. ''பாங்கெ தரா''— இது 1924-இல் முதன் முறையாக வெளியிடப்பட்டது. ''மஃக்ஸன்'' சஞ்சிகையிலும் வேறு இதழ்களிலும் வெளிவந்தவையும், லாஹூர் அஞ்சுமனெ கஷ்மீரி முஸல்மானுன், அஞ்சுமனெ ஹிமாயத்தெ இஸ்லாம் சபைகளின் கூட்டங்களில் படிக்கப் பெற்றவையுமான தம்முடைய ஆரம்பகாலக் கவிதைகள் சிலவற்றை இக்பால் இதில் இடம்பெறச் செய்யவில்லை. அவர் விரும்பிய தரம் அவற்றில் இல்லையென்று அவர் நினைத்திருக்கலாம் என்பது புலனுகிறது. 1924-இல் இருந்து ஜூன் 1975 வரை இது முப்பத்திரண்டு முறை பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

4. ''பாலெ ஜிப்ரீல்.''—முதன் முதலாக 1935-இல் இது வெளியிடப் பட்டது. துவக்கத்தில் 'கஸல்'களும், பிறகு 'ருபாயீ'க்களும், அவற்றைத் தொடர்ந்து யுக்திநிலைச் செய்யுள்களும் பல்வேறு தலைப்புகளின் கீழ் பல பாட்டுக்களும் இதில் இடம் பெற்றுள்ளன. 1975 ஜனவரி வரையில் இது இருபது தடவை அச்சிடப் பெற்றுள்ளது. இக்பாலின் உர்தூ கவிதைத்திறனின் உச்ச நிலையை இதிலே காணலாம். எவ்வாறெனின், உள்ளத்தை ஈர்க்கும் 'கஸல்' என்னும் பாட்டுவகையைக் கை

யாண்டு, சமுதாயத்தில் உள்ளத் தூய்மையையும், உறுதிப் பாட்டையும் உண்டு பண்ணி, மேலை நாகரிகத்தின் கவர்ச்சியிலிருந்து தற்காத்துக் கொள்ளச் செய்து, மெய்ந் நம்பிக்கையாளர்களாகத் திகழச் செய்ய வல்ல உண்மைகள், அறிவிப்புகள், போதனைகள் ஆகிய வற்றை இதில் அவர் வழங்கியுள்ளார்.

5. ''ஜர்பெ கலீம்.'' — ''இன்றைய உலகிற்கு எதிரான ஒரு போர் அறிவிப்பு'' என்னும் விளக்கத்தோடு கூடி இது 1936-இல் வெளியிடப்பட்டது. முன்னுரைக்குப் பிறகு, கஸல்களும் பிறபாட்டுக்களும் ஆறு தலைப்புகளின் கீழ் பிரித்துத் தரப்பட்டுள்ளன. (1) இஸ்லாமும் முஸ்லிம்களும் (2) கல்வியும் சிட்சையும் (3) பெண் (4) இலக்கியமும் நுண்கலைகளும் (5) கீழ்த்திசை, மேற்றிசை அரசியல் (6) மெஹ்ராப் குல் அஃப்கானின் சிந்தனைகள். அனைத்துப் பிரச்னைகளிலும் அல்லாமா இக்பாலின் மணியான கருத்துக்கள் அவற்றின் மீது இறுதித் தீர்ப்பாக அமைந்து விடுகின்றன. அவற்றில் பொதிந்துள்ள பாடங்களும் செய்திகளும் எல்லாச் சமுதாயங்களும் எல்லா நாடுகளும் ஈடேற்றம் பெற உதவக் கூடியவை ஆகும். 1936 ஜூலையிலிருந்து 1976 ஜனவரி வரை அதன் பதினெட்டு பதிப்புகள் வெளிவந்துள்ளன.

6. ''முஸ்லிம் சமுதாயம் பற்றிய சமூகவியல் ஆய்வு''ம் ''இஸ்லாமிய கிலாஃபத்''தும்.— இவை இக்பால் ஆங்கிலத்தில் நிகழ்த்திய இரு சொற்பொழிவுகளாகும். முந்தியதை மவ்லானா ஜஃபர் அலீ கானும் பிந்தியதை சௌத்ரீ முகம்மது ஹுஸைனும் உர்தூவில் மொழி பெயர்த்துள்ளனர்.

7. ''அஸ்ராரெ குதீ.''— இது இக்பாலின் முதலாவது ஃபார்ஸி மொழிப் படைப்பாகும். 1915-இல் வெளியிடப் பெற்றது. அப்போதிருந்து இதுவரை அதன் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. இதில் அல்லாமா இக்பால், படைப்புகள் அனைத்துமே ''குதீ'' (''தான்மை'') யின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றன என்பதை பல வழிகளில் நிலை நாட்டியுள்ளார். குதீ (தான்மை)யுடன் பேரின்பக் காதலின் தாபம் ஒன்றிணைந்து விட்டாலோ, அப்போது அந்தத் 'தான்மை' அகிலாண்டமென்ன, அவற்றிற்கு அப்பாலும் வியாபித்து விடுகிறது. 'தன்னையழித்து'க் கொள்வது அல்லாமா இக்பாலின் கருத்தில் நிந்தனைக்குரியதாகும். எனினும் தன்னை ஆய்தலும் தன்னை உணர்தலும் அவரின் வாழ்க்கை லட்சியங்களாகும், இக்பால் குதீ (தான்மை)யின் பாதையைக் காண்பித்து, பூரணத்துவம் பெறுவதற்காகவும், குதீ (தான்மை)யை அறிந்தவர் பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற தகுதியை அடைவதற்காகவும் அது கடக்க வேண்டிய படித்தரங்களை அறியச் செய்கிறார். இம் மஸ்னவீ, உலகின் பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளது.

8. ருமூஸெ பேகுதீ—உண்மையில் இது ''அஸ்ராரெ குதீ''யின் இரண்டாம் பகுதியாகும். இது 1918-இல் தனியாக வெளியிடப்பட்டது. பின்பு இரண்டையும் சேர்த்து ஒரே நூலாகப் பதிப்பிக்கப் பட்டது. இஸ்லாம் வகுத்துள்ள சட்ட திட்டங்கள் எந்தவொரு சமுதாயமும் நிலைத்து வாழ்வதற்கு மிகச்சிறந்த வாழ்க்கை வழியாகும் என்பதைத் தக்க ஆதாரங்களோடு இக்பால் இதில் நிரூபித்திருக்கிறார். ஒரு குறிப்பிட்ட அளவு வரை தன்னுடைய தனித்தன்மையை நிலை பெறச் செய்வதும் கட்டிக்காப்பதும் அதற்கு மேல், சமுதாயத்தின் நன்மைக்கும் நல்வாழ்விற்குமாக தன் தனித் தன்மையைத் தியாகம் செய்வதும் தனி மனிதனின் இன்றியமையாக் கடமையாகும். இந்நூலில் அல்லாமா இக்பால் இஸ்லாமிய சமுதாயத்தையே முன்னிலைப்படுத்தி இருக்கிறார் எனினும் ''அஸ்ராரும் ருமூஸும்'' ஆகிய இரு மஸ்னவீகளும் உண்மையில் மனித குலம் அனைத்தையுமே விளித்துக் கூறப்படுவனவாகும். இவற்றின் மூலம், இக்பால், தனி மனிதனையும் சமுதாயத்தையும் பற்றி வகுக்கப் பெற்றுள்ள தவறான நவீன காலக் கொள்கைகளின் மேற்பூச்சைக் கலைத்து, தனி மனிதனுடையவும், சமுதாயத்தினுடையவும் பாதுகாப்புக்கும், வாழ்வுக்கும், நிலை பெறுதலுக்கும் முன்னேற்றத்திற்கும் அவசியமான நேரிய பாதையைக் காட்டியிருக்கிறார்.

இவ்விரு மஸ்னவீகளும் சமுதாயத்தின் கடந்த காலம் சம்பந்தப்பட்டவையே. எனவே சமுதாயத்தின் வருங்காலம் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. அது எவ்வாறிருக்க வேண்டும் என்பதும் இக்பாலின் சிந்தையில் உருவாகியிருந்தது. அதனால் தான் அவர் மவ்லானா கிராமீ அவர்களுக்கு 1-7-1917 தேதியிட்ட கடிதத்தில் இப்படி எழுதுகிறார்:

''மஸ்னவியின் இரண்டாம் பாகம் (ருமூஸெ பேகுதீ) முடிவடையும் தறுவாயில் உள்ளது. ஆயினும் அதன் மூன்றும் பகுதி பற்றிச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறேன். கருத்துகள் வெள்ளம்போல்வந்து கொண்டிருக்கின்றன. எதை யெதைக்

குறித்து வைத்துக் கொள்வது என்று திகைத்துக் கொண்டிருக்கிறேன். இந்த பாகத்தின் கருப்பொருள் ''இஸ்லாமின் எதிர்கால வாழ்வு'' ஆகும். அதாவது, முஸ்லிம்களின் வருங்கால வரலாற்றை குர்ஆன் ஷரீப் எவ்வாறு தெளிவுபடுத்திக் காட்டுகிறது என்பதையும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் அழைப்புப் பணி துவங்கியதோடு நிறுவப் பெற்ற இஸ்லாமிய சமுதாயம், வர இருக்கும் நூற்றுண்டுகளில் எத்தகைய சந்தர்ப்பங்களையும் சம்பவங்களையும் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதையும் இறுதியில் அந்நிகழ்ச்சிகளின் முக்கியத்துவமும் நோக்கமும் என்ன என்பதையும் அது காட்டும். நான் அறிந்துணர்ந்த வரையில் இவ்விஷயங்கள் அனைத்தும் குர்ஆன் ஷரீபில் உள்ளன. மனம் போன போக்கில் இவ்வாறு பொருள் கொள்ளப்பட்டிருப்பதாக யாரும் குற்றம் சாட்ட இயலாத அளவுக்கு நிரூபணம் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இருக்கிறது. குர்ஆன் ஷரீபில் பொதிந்துள்ள இந்த ஞானத்தை அல்லாஹ் எனக்கு அருளியிருப்பது அவனுடைய சிறப்பான கொடையும் தனிக்கருணையுமாகும். நான் பதினைந்தாண்டு காலம் குர்ஆனைப் பயின்றேன். சில வசனங்கள் குறித்தும் சில அத்தியாயங்கள் பற்றியும் மாதக்கணக்கிலன்றி ஆண்டுக்கணக்கில் சிந்தனையில் ஈடுபட்டிருந்த பின்னரே மேற்குறிப்பிட்ட முடிவுக்கு வந்தேன். எனினும் விஷயம் வெகு நுட்பமான ஒன்றாதலால் அதை எழுதுவது எளிதல்ல. எப்படியிருப்பினும், அதை ஒரு முறை எழுதி வைத்து விடுவோம், நான் இறந்த பிறகு அது வெளியிடப்படும்; அல்லது அதற்குரிய வேளை வரும்போது அது வெளி வரட்டும்''.

எனினும், என்ன காரணத்தினாலோ இத்திட்டம் செயலுருப் பெறவில்லை.

9. பயாமெ மஷ்ரிக். (ஃபார்ஸி)—பிரபல ஜெர்மனியக் கவிஞரான 'கெத்தே'யின் ''மேற்கத்திய தீவானு''க்கு மறுமொழியாகும். இந்நூல் 1923-இல் வெளியிடப்பட்டது. அதிலிருந்து 1975 வரை அதற்கு பதினான்கு பதிப்புகள் வெளியாகியுள்ளன. இதன் முன்னுரையில் இந்நூலின் நோக்கம் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார்:

''‘மேற்கத்திய தீவான்’ வெளியிடப்பட்டு நூறு ஆண்டுகள் கழிந்த பிறகு எழுதப் பெற்றுள்ள 'பயாமெ மஷ்ரிக்' குறித்து நான் எதுவும் சொல்லத் தேவையில்லை. இதன் முக்கிய குறிக்கோள், பெருமளவுக்கு தனிப்பட்டவர்களுடையவும் சமுதாயங்களுடையவும் அகப் பண்பாட்டுடன் தொடர்புள்ளவைகளான ஒழுக்க, மார்க்க, தேசீய உண்மைகளை எடுத்துரைப்பதாகும் என்பதை இதைப் படிப்பவர்கள் தாமே உணர்ந்து கொள்வார்கள்...... கீழ்த்திசை, குறிப்பாக இஸ்லாமியக் கீழ்த்திசை, பல நூற்றுண்டுகாலம் நீடித்த உறக்கத்திற்குப்பின் கண் விழித்திருக்கிறது. வாழ்க்கையானது, முதலில் அதன் அந்தரங்கத்தின் உள்ளாழத்தில் புரட்சி ஏற்படாத வரை, தனது சுற்றுச் சார்பில் அது எந்த விதமான புரட்சியையும் தோற்றுவிக்க முடியாது என்பதையும் முதலில் மனிதனின் சிந்தையில் உருப்பெருமல் புத்துலகு எதுவும் வெளிப்படையான வடிவமைப்பு பெறுவதில்லை என்பதையும் கிழக்கத்திய நாடுகள் உணர வேண்டும்.

إِنَّ اللَّهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتَّىٰ يُغَيِّرُوا مَا بِأَنفُسِهِمْ

எந்தவொரு சமுதாயமும் தன்னைத் தானே மாற்றிக் கொள்ளாத வரையில் அல்லாஹ்வும் அதனை மாற்றுவதில்லை (13:11) என்று திருக்குர்ஆன் தெளிவான, வலுவான வார்த்தைகளில் எடுத்துரைக்கும் இயற்கையின் இந்த அசைக்க முடியாத சட்டம் வாழ்க்கையின் தனிப்பட்ட தன்மை, கூட்டுத்தன்மை ஆகிய இரண்டிற்குமே பொருந்துவதாகும். நான் என்னுடைய பார்ஸி நூல்களில் இந்த உண்மையைத்தான் மையமாகக் கொள்ள முயன்று வந்திருக்கிறேன்.

மேலை நாடுகளில் ஆன்மிகம் அற்றுப் போனது குறித்து கெத்தே அங்கலாய்த்து கீழ்நாடுகளிலருந்து அது கிட்டுமென நம்பிக்கை கொள்கிருர். நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, இக்பால் மேலை நாடுகளுக்கு ஒழுக்கம், மதம், நாகரிகம் ஆகியவை பற்றி நினைவூட்டிப் பாடம் போதித்து, பரிவுணர்வு, உற்சாகம், துடிப்பு, செயலூக்கம், தாபம் ஆகிய உணர்ச்சிகளை உண்டு பண்ணிக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தி ஆன்மிகப் பாடம் பயிலாமல், வாழ்வு உயர்படித்தரங்களை எய்துதல் இயலாது என்று ஐரோப்பாவுக்கு உணர்த்தினுர்.

10. ஜபூரெ அஜம் (பார்ஸி) — இதில் மஸ்னவீ ''குல்ஷனெ ராஸெ ஜதீது''ம், ''பந்தகீ நாமா''வும் சேர்ந்துள்ளன. ஜுன் 1927-லிருந்து ஆகஸ்ட் 1974 வரை பத்து தடவை பதிப்பிக்கப் பெற்றுள்ளது. ஸையித்

மஹ்மூத் ஷபிஸ்தரீயின் பிரசித்தி பெற்ற 'குல்ஷனெ ராஸ்' என்னும் மஸ்னவீயைப் பின் பற்றி அல்லாமா இக்பால் அவர்கள், மஸ்னவீ ''குல்ஷனெ ராஸெ ஜதீதி''ல், ஒன்பது கேள்விகளை எழுப்பி அவற்றிற்கு பதிலளிக்கிறார். ''வஹ்தத்துல் வுஜூது'' (அத்வைத தத்துவம்) சம்பந்தப்பட்ட பிரச்னைகளை நவீன உத்திகளைக் கொண்டு தீர்த்து வைத்து, செயல் பூர்வமான உலகின் பால் அதற்குள்ள தாக்கத்தையும் தொடர்பையும் விளக்குகிறார்.

''பந்தகீ நாமா'' உண்மையில் அடிமைத் தனத்திற்கும், அடக்கு முறைக்கும் எதிரான அறப் போராட்டமாகும். இதில் அவர் முதலில் அடிமைத்தனம் பற்றியும் அதைத் தொடர்ந்து அடிமைகளின் நுண்கலைகள்—சங்கீதம், ஓவியம் பற்றியும் விவாதிக்கிறார். இறுதியில், சுதந்திர மனிதர்களின் கட்டடக் கலைபற்றி அறிமுகம் செய்கிறார்.

கஸல்களையும், தனிப் பாடல்களையும், கொண்ட ஒரு பகுதியில் அல்லாமா இக்பால் அவர்கள் இறைவனை விளித்துப் பாடுகிறார். மற்றொரு பகுதியிலே அகில முழுவதையும், குறிப்பாகக் கீழ்த்திசையை, நோக்கி, விழிப்புற்றெழுந்திட அழைக்கிறார். கடந்தகாலப் பெருமைகளை நினைவு கூர்ந்து, இயக்கம், விழிப்புணர்வு, செயலூக்கம், அன்பும் உயிர்ப்பும், ஆகியவற்றைப் பெற்றிட வேண்டுமென போதிக்கிறார். அப்படிச் செய்தால் மட்டுமே கீழைநாடுகள், கடந்த காலப் பெருமையையும், புகழையும், கண்ணியத்தையும், உயர்வையும் மீண்டும் அடையப் பெற்று, லௌகிகம், ஆன்மிகம் ஆகிய இருதுறைகளிலுமே உலகின் பிற பகுதியினரை விட மேம்பட்டு, விஞ்சி நின்று வெற்றிக்கொடி நாட்டமுடியும் என்கிறார். ஜபூரெ அஜமில் இக்பால், கஸல் பாவகையை அதன் பூரணமான உச்சநிலைக்கு உயர்த்திச் சென்று, மிகமிக உயர்ந்த எண்ணங்களையும், பலனளிக்க வல்ல போதனைகளையும் எடுத்துச் சொல்லவும்கூட, கஸலைக் காட்டிலும் வலுவான உயிருள்ள பாட்டினம் வேறெதுவுமில்லை என்று நிரூபித்திருக்கிறார். அதன் காரணமாகத்தான் இக்பால்,

> ''உங்களுக்கு சுவை இருப்பின் ஜபூரெ அஜமைத் தனிமையிலமர்ந்து படியுங்கள்''

என்று தம் வாசகர்களுக்கு சிபாரிசு செய்திருக்கிறார்.

11. ஜாவீத் நாமா (பார்ஸி).— இது இத்தாலியக் கவிஞர் தாந்தே (Dante) எழுதிய ''இறையியற்றும் இன்ப நாடகம்'' (Divine Comedy) என்னும் நூலுக்குப் பிரதியாகும். 1932-லிருந்து செப்டம்பர் 1974 வரை இதற்கு ஆறு பதிப்புகள் வந்துள்ளன. இதில், ஜிந்தாரூத் (உயிரோட்டமுள்ள நதி) என்று குறிப்பிடப் படும் இக்பால் குருநாதர் ரூமியால் வழிநடத்தப் பெற்றவராக பல வானங்களையும் சுற்றிப் பார்த்து, இறையண்மையையும் அடைந்து இறையொளியைத் தரிசிக்கும் பேற்றையும் பெறுகிறார். சந்திரமண்டலத்திலும் 'தவாஸீன்' பள்ளத்தாக்கிலும் புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய மண்டலங்களிலும் அவ்வான்களுக்கு அப்பாலும் அவர் சந்திக்கும், விசேடத்தன்மை பொருந்திய ஒவ்வொருவர் வாயிலாகவும் சிக்கலான பல பிரச்னைகளுக்குத் தீர்வு காண்கிறார். அதோடு பயனுள்ள போதனைகளும் புரிகிறார். இறுதிப் பகுதியில் தம் மகன் ஜாவீதை விளித்து, இளைய சமுதாயம் முழுவதற்குமே செய்தி சொல்கிறார். ''புதிய தலைமுறை''யினரின் போக்குகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப அவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்குகிறார்.

12. 'பஸ் செ(ஹ்) பாயத் கர்த் அய் அக்வாமெ ஷர்க்'கும் 'மஸ்னவீ முஸாபிரு'ம்.— இது முதன் முறையாக 1936-இல் பிரசுரிக்கப் பெற்றது. 1972 வரை இதற்கு ஏழு பதிப்புகள் வெளிவந்துள்ளன. இதில், குருநாதர் ரூமி வாய் மொழியாக, இக்பால்,

> ''கீழ்த்திசை தன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து விட்டது'' என்னும் சுபசெய்தியை சொல்லச் செய்கிறார்.

மேலும் ரூமியின் மூலமாகவே கீழ்த்திசை நாடுகளுக்கு, நபி மூஸாவின் ஞானம், பிர் அவ்னின் புத்தி ஆகியவற்றிலுள்ள தனித்தன்மைகளை விளக்கி, இறையேகத்துவத்தைப் பற்றி போதிப்பதோடு, ''இல்லை'' என்பதும் ''உண்டு என்று உறுதிப்படுத்துவது''ம் ''சமுதாயங்களின் சாக்கும் கருவியும்'' ஆகும் என்று நிரூபிக்கிறார். ஏழ்மையை விரும்பி ஏற்பது பற்றியும், சுதந்திர மனிதன் பற்றியும் நம்பிக்கையும் உணர்வும் ஊட்டும் தெளிவும் விளக்கமும் தந்த பிறகு, ஷரீஅத் சம்பந்தமான இரகசியங்களையும் தரீக்கத் சம்பந்தப்பட்ட மறைபொருள்களையும் தெரிவிக்கிறார். ''இந்தியர்கள் மத்தியில் பிளவுணர்வு'' பற்றி வேதனை தெரிவித்து ஒற்றுமை பற்றிய பாடம் போதித்து, நிலவி வருகின்ற அரசியல் நிலை குறித்து ஆராய்கிறார். அரபிய சமுதாயத்திற்கு அதன் பழம் பெருமையை நினைவூட்டுகிறார். இறுதியாக, மேலை நாடுகள் பின்னிவைத்துள்ள மாயவலையிலிருந்து, கீழைநாடுகள், அறுத்துக் கொண்டு

வெளியேற வேண்டுமென அவர் அறிவுரை வழங்குகிருர்.

''மஸ்னவீ முஸாபிர்'', அஃப்கானிஸ்தான் சுற்றுப் பயணத்தின் நினைவுகளாக எழுதப் பட்டது. இதில் எல்லைப்புற மக்களுக்கு, அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தின் உட்பொருளை (ரம்ஸெ தீனெ முஸ்தபா) உணரும்படியும், அவர்களின் சுபாவத்தில் குதீ (தான்மை)யை ஏற்படுத்திக் கொள்ளவும் போதனை புரிந்திருக் கிருர்.

13. அர்முகானெ ஹிஜாஸ்.— இந்நூலை அல்லாமா இக்பால் அவர்கள் நோய் வாய்ப் பட்டிருந்த தம் இறுதி நாட்களில் இயற்றினுர். எனினும் அது அவரின் மறைவுக்குப் பிறகு 1938 நவம்பரில் தான் வெளியிடப் பட்டது. அதன் ஒரு பகுதியில், ''இறைவன் முன்பாக'', ''திருநபி முன்பாக'', ''சமுதாயத்தின் முன்பாக'', ''மனிதஇனம் முன்பாக'', ''வழித் தோழர்களுக்கு'' என்பன போன்ற பார்ஸி தனிப்பாடல்களும் ருபாயீக்களும் இடம் பெற் றுள்ளன. அவற்றைப் படிக்கும் போது, கவிஞர் தம் கற்பனையில் ஹிஜாஸ் யாத்திரை செய்வ தாகப் புலனுகிறது. சிந்தனையாழமும், உணர்வின் தாபமும் இத்தனிப் பாடல்களின் சிறப்பம்சங்களாகும்.

அதன் இரண்டாம் பகுதியில், ''இப்லீஸின் ஆலோசனைக் கூட்டம்'', ''மகனுக்கு பலூச்சிக் கிழவரின் அறிவுரை'', ''ஓவியமும் ஓவி யனும்'', ''ஆலமெ பர்ஸக்'', ''ஆவாஸெ கைப்'', ''முல்லாஜாதா ஜைகம் லோலாபி கஷ் மீரியின் குறிப்பேடு''போன்ற உர்தூ கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இந்தக் கவிதைகளிலே, இக்காலத்திய அரசியல், சமுதாயப் புரட்சிகள் பற்றியும், அறிவியக்கங்கள் குறித்தும் தீர்மான மான விமர்சனங்கள் புரியப் பட்டுள்ளன. இவற்றின் மூலம் இதுவரை மறைபொருளாக இருந்த பல இரகசியங்கள் வெளிப்படுத்தப் பட்டு, சரியான வழிகாட்டுதல் கிடைக்கிறது. செப்டம்பர் 1975 வரை இதற்கு பதினெரு பதிப் புகள் வெளியிடப்பட்டுள்ளன.

14. இஸ்லாத்தில் மார்க்க சிந்தனையின் புத்தமைப்பு (The Reconstruction of Religious Thought in Islam) -அல்லாமா இக்பால் சென்னை யிலும் ஹைதராபாத்திலும் நிகழ்த்திய தத்துவக் கருத்துகள் நிறைந்த ஆறு சொற் பொழிவுகளின் தொகுப்பு இந்த நூல். இது முதன் முதலில் 1930-ல் லாஹூரிலிருந்து வெளியிடப் பட்டது. பின்பு, 1934-ல், சிறு மாறுதல்களுடனும் ஏழாவது சொற்பொழிவு ஒன்றை இணைத்தும் ஆக்ஸ்போர்டு யுனிவர் ஸிட்டி பிரஸ்ஸினுல் வெளியிடப் பெற்றது. மூன்ரும்முறையாக மீண்டும் லாஹூரிலிருந்தே இது பிரசுரிக்கப் பெற்றது. ''அறிவும் சமய அனுபவங்களும்'', ''சமய அனுபவத்தின் தத்துவப் பரிசோதனை'', ''கடவுட் கருத்தும் பிரார்த்தனையின் பொருளும்'', ''மனித அகம், விதி, செயலுரிமை'', ''இஸ்லாமியப் பண் பாட்டின் உட்பொருள்'', ''இஸ்லாத்தில் இயக்கத் தத்துவம் (இஜ்திஹாத்)'' என்பன இதிலுள்ள விஷயங்கள். இந்நூலில், அல்லாமா இக்பால் நவீன இஸ்லாமிய தத்துவக் கொள்கை ஒன்றின் நிறுவனர் போன்று தோற்றம் தருகிருர். இப்பிரச்னைகளை, இஸ் லாத்தின் அடிப்படையிலும், இக்கால தத்துவ ஞானக் கொள்கைகளின் அடிப்படையிலும் விரி வான முறையில் விவாதிப்பதன் மூலமாக, இன்றைய சிந்தனையாளர்கள், இஸ்லாத்தைப் பற்றி ஆராய்வதற்கு வழிதிறந்து விட்டிருக் கிருர். இந்நூலை ஸையித் நஜீர் நியாஜீ உர்தூவில் மொழி பெயர்த்திருக்கிருர். அது 1952-இல் வெளியிடப் பட்டது. ஆனல் அது இப்போது கிடைப்பதில்லை. இச்சொற்பொழிவு களைப் படித்தாராயாமல் இக்பாலின் சிந்தனைப் போக்கு பற்றி சரிவரத் தெரிந்து கொள்வது சாத்திய மல்ல.

இந்நூல்கள் மட்டுமன்றி ''இக்பாலின் கடிதங்கள்'' பல தொகுப்புகள் வெளிவந் துள்ளன. இவற்றில், இக்பால் இயற்கையான முறையில் பேச்சும் சிரிப்புமாக, அதே சமயத்தில் அறிவு முத்துக்களையும் உதிர்ப்பவராகக் காட்சி தருகிருர்.

பல்வேறு சஞ்சிகைகளிலும், செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரமாகியிருந்த இக் பாலின் ஆங்கில, உர்தூ கட்டுரைகள் பலவும், மேலும் பலதரப்பட்ட சொற்பொழிவுகள், பிர சங்கங்கள், அறிக்கைகள் செய்திகள் பல இடங் களிலிருந்தும் தொகுக்கப் பெற்று, பல நிறு வனங்களால் நூல்களாக வெளியிடப் பெற் றுள்ளன. அவற்றுள், Stray Reflections, ''குலைப் தாரெ இக்பால்'', ''மகாலாத்தெ இக்பால்'', ''ஹர்ஃபெ இக்பால்'' ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும்.

### வாழ்க்கைத் தத்துவம்

இக்பாலுடைய வாழ்க்கைத் தத்துவம்பற்றி சுருக்கமாக ''தாயிரயெ மஆரிஃபெ இஸ்லா மியா''வில் எழுதப்பட்டுள்ளது பின்வருமாறு :

(1) இக்பால் இஸ்லாமியக் கோட் பாடுகளில் உண்மையான நம்பிக்கை கொண்டவராயும், இஸ்லாமிய நாகரிகப்

பண்பாடுகளைப் பிரச்சாரம் செய்பவராகவும் இருந்தார். இறைவனே நிரந்தரமான படைப்பாளன். நொடிநேரமும் இடைவெளியின்றி படைத்துக் கொண்டே இருப்பவன். வாழ்க்கையே முழுக்க முழுக்க படைப்புத் தொழில்தான். (மனிதன் தன் இலட்சியம் இன்னதென்பதை உணர்ந்து கொள்வானுயின் அப்போது அவன் தனது படைப்பு நடவடிக்கை இன்னவிதமாக இருக்க வேண்டுமென முடிவு செய்து கொள்வான்.)

(2) மனித இனத்தின் பரிணும வளர்ச்சி அல்லாஹ்வின் திருத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் அருள்மயமான வாழ்விேைடு அதன் உச்சகட்டத்தை அடைந்து விட்டது. 'கத்மெநுபுவ்வத்' (நபித்துவத்தின் இறுதி) என்பதற்குப் பொருள், இனிமேல் வேருெரு நபி தேவையில்லை என்பதாகும். காரணம், வாழ்க்கையின் அடிப்படை உண்மைகள் அனைத்தும் இறைவன் அளித்த இறுதித் திருவேதமான குர்ஆன் ஷரீபில் பாதுகாக்கப்பெற்று விட்டன. மேலும், வரையறையற்ற முன்னேற்றத்திற்கான வழிகள் திறந்துவிடப் பெற்றுள்ளன. இஸ்லாமிய சமுதாயம், இஜ்திஹாத் (சரியான் வழிகாண மெய்ம் முயற்சி) மேற்கொண்டு முன் செல்வதற்கான வாயிலை அடைத்து விடலாகாது. ஏனெனில் தொடர்ந்த போராட்டமும் இடைவிடாத ''இஜ்திஹாது''ம் தான் உண்மையான வாழ்க்கையும் அதன் இலட்சியம் நிறைவேறுவதும் ஆகும். வாழ்க்கையின் வார்ப்பு அச்சுகள் மாறிக்கொண்டே இருக்கும்; ஆனுல் கருத்துக்களின் புத்தமைப்பிலும் பெருமானங்களின் மதிப்பீட்டிலும் ஏற்படும் எந்த வளர்ச்சி மாற்றத்தின் மீதும் பரிசுத்த குர்ஆனே மேலாணை செலுத்தும்.

(3) மனிதன் தன் அகம், புறம் ஆகிய இரண்டையும் அடக்கி யாள்வதன் மூலம் தன் அறிவையும், வலிமையையும் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

(4) ஐரோப்பிய நாகரிகத்தையும், பண்பாட்டையும் இக்பால் வெகு கடுமையாக விமர்சிக்கிருர். ஐரோப்பாவின் குறுகிய பகுத்தறிவு வாதமும், லோகாயதப் போக்கும் அவரை சலிப்படையச் செய்கின்றன. முஸ்லிம்களும் ஐரோப்பாவைப் போன்றே கலைகளிலும் விஞ்ஞான அறிவுகளிலும் முன்னேற வேண்டும்; ஆனுல் அதே சமயத்தில், லோகாயத அடிப்படையிலான பண்பாட்டில் ஆன்மிக சிந்தனைப் போக்கையும், செல்வாக்கையும் புகுத்துவதன் மூலம் அதனை சம்பூரணமான மனிதத் தன்மையை பிரதிபலிக்கக் கூடியதாக ஆக்க வேண்டும் என்று அவர் விரும்புகிருர்.

(5) வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் இஸ்லாமிய முறைகளை மட்டுமே கடைப்பிடித் தொழுக வேண்டும் என்னும் கொள்கையை அவர் பிரச்சாரம் செய்கிருர்.

(6) இஸ்லாத்தின் மூலாதாரக் கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் பிசகின்றி கடைப்பிடிப்பது மனிதனின் நடத்தையை ஒழுங்கமைக்கவும் செம்மைப்படுத்துவதற்கும் இன்றியமையாதது என்று கருதுகிருர். ஆனுல் அதே சமயத்தில், எல்லா வகைகளிலும் புறத்தைக் காட்டிலும் அக ஒழுக்கத்திற்கே முதலிடம் அளிக்கிருர்.

(7) இஸ்லாமிய போதனைகளில் புகுந்து விட்டுள்ள இஸ்லாத்திற்குப் புறம்பான ஆத்மஞானக் கோட்பாடுகளையும், வாழ்க்கையை விட்டு ஒதுங்கியோடும் துறவு முறைகளையும் தவிர்த்து விலகுமாறு இக்பால் போதிக்கிருர். எனினும், மவ்லானு ரூமீ போன்ற மாபெரும் ஸூஃபி ஞானியரிடம் காணப்படும் மெய்ஞ்ஞானத் தத்துவ சாராம்சத்தை ஆதரித்து ஏற்றுக் கொள்கிருர்.

(8) தத்துவஞானி என்ற முறையில் இக்பால் ஒரு 'சிருட்டிப் பரிணும வாதி' (Creative Evolutionist) ஆவார். ஆகையால் அவரை பெர்க்ஸான் (Bergson) உடன் ஒத்த கருத்துள்ளவராகக் கருத வேண்டும். நீட்சே(Nietzsche)யையும் அவர் புகழ்ந்தார் என்ருலும் இறைத்தன்மை பற்றி அவர் சரியான தெளிந்த கருத்தை உருவாக்கிக் கொள்ள முடியாமல் போனதால் அவர் நிலை தடுமாறிப் போனதோடு அவருக்குப் பூரணத்துவம் பெற்ற வழி காட்டியும் கிட்டவில்லை என்கிருர் இக்பால்.

(9) இக்பாலின் சிறப்பான உரைபொருள், தன்னை அறிவதும் அதனைப் பூரணத்துவம் அடையச் செய்வதும் ஆகும். தன்னை அறிவதன் மூலம் தன் இறைவனை அறிவதற்கு வழிபிறக்கும் என்பது பழமையான கருத்துதான். இருந்தாலும் அதற்கு முன்பாக வேறு எங்கும் காணப்படாத அளவுக்கு தெளிவாகவும், விரிவாகவும் அக்கோட்பாட்டினை அவர் விளக்கியுள்ளார்.

(10) ''குதீ''யைத் தவிர இக்பாலின் மற்ெருரு சிறப்புப் பொருள் பேரின்பக் காதல் ஆகும். அதனை அவர் படைக்கும் சக்தி என்று கருதுகிருர். தர்க்க அடிப் படை கொண்ட புத்தியோடு ஒப்பிடும் போது பேரின்ப வேட்கையே மெய்யறிவின் ஊற்றுக் கண்ணென விளங்கும். ஸூஃபி களின் இந்த ஞானமும் ஆனந்த பரவச உணர்வும் பற்றிய செய்தியும்கூட பழை யதுதான் என்ருலும் இக்பாலின் ஆர்வமும் தெளிவும், கவித்துவ மேதையும் சேர்ந்து அதற்கு அசாதாரணமான விசாலத்தை யும், புதுமையையும், ஆழத்தையும் அளித்து விட்டன.

சிந்தனையாளர் என்ற வகையில் இக்பால் இஸ்லாமிய சமுதாயத்தின் மிக உயர்ந்த வழி காட்டிகளில் ஒருவராகக் கருதப்பட வேண்டி யவர் ஆவார். அவருடைய சிந்தனைகளும் நினைவுகளும் முஸ்லிம்களின் உணர்வுகளிலும் உள்ளுணர்வுகளிலும் ஊடுருவி நிற்கின்றன. முஸ்லிம்களைத் தமது சிரத்தையின்மையை விட் டொழிக்கச் செய்வதிலும் சுதந்திரம், மெய் விசாரணை ஆகியவற்றின் பாதையில் செலுத்து வதிலும் இக்பாலுக்குக் கிடைத்தஅளவு வெற்றி அவர் காலத்திய சிந்தனையாளர்கள், தலைவர் கள் யாருக்குமே கிடைக்கவில்லை. அவருடைய செல்வாக்கு, பாக்கிஸ்தானையும், இந்தியாவை யும் கடந்து, அஃப்கானிஸ்தான், ஈரான் மட்டு மன்றி அரபு உலகத்திலும் மேலை நாடுகளிலும் கூட பரவியிருக்கிறது. பல நூற்ருண்டுகளுக் கொருமுறையே தோன்றி மானுட களம் முழு தையுமே ஒளிமயமாக்கும் வெகு சிலருள் அவர் ஒருவராவார்.

(தாயிரயே மஆரிஃபே இஸ்லாமியா —இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்,- உர்தூ, தொகுதி 3, பக்கங்கள் 13-14.)

**அவர் தம் பொறுப்பை நிறைவேற்றுதல்**

ஒரு மகாகவி, சிந்தனையாளர், சீர்திருத்த வாதி என்ற நிலைமையில் இக்பால் தம்முடைய பொறுப்புகளை வியத்தகு முறையில் நிறைவேற் றினர். தம் வாழ்க்கை இலட்சியத்தையும் தம் குறிக்கோள்களையும் பூர்த்தி செய்ய, அவர், என்ன வழிகளை மேற்கொண்டார் என்பதையும் அதில் அவர் எந்த அளவு வெற்றி கண்டார் என்பதையும் தெரிந்துகொள்வதற்கு முஹம்மது அப்துல்லாஹ் குறைஷி எழுதியுள்ள பின்வரும் குறிப்புகள் உதவுகின்றன.

''இக்பாலின் பன்முக மேதையும் பல் வேறு விஷயங்களில் அவர் கொண்டிருந்த அக்கறையும் எத்தனையோ வழிகளில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. ஒருபுறம் கவிதைத் துறையில் புதுப்புது உத்திகளைக் கண்டு பிடித்துக் கொண்டிருந்த அவர், மற்ெருரு புறம் தத்துவத்தில் புதிய கொள்கைகளையும் நிறுவிக் கொண்டிருந் தார். சாகக் கிடந்த சமுதாயத்திற்கு அவருடைய தத்துவமும் ஞானமும் நிறைந்த கவிதைகள் புத்துயிரளித்தன.

தத்துவவாதி, அடிப்படை உண்மை களுக்கு, வறட்டுத்தனமான, உயிரில்லாத விளக்கங்களை அளித்துக் கொண்டிருப் பான். ஆனல் கவிஞனே உண்மைகளை எடுத்துரைக்கும் போது அவற்றில் உயிர் தளும்பி நிற்கிறது. தத்துவவாதி அகிலத் தின் வடிவமைப்பை சிந்தையில் உரு வகித்து, தன் முடிவுகளை, மனத்தினல் மட்டுமே கருதக்கூடிய குறியீட்டுச் சொற் களைக் கொண்டு விளக்க முயல்கிருன். ஆனல் இக்பால் கூறுவதோ:

''கவிஞன் இயற்றும் கவிதை நல் லதோ, கெட்டதோ, எதுவாயினும் தொட் டுணர முடியாததாய் உள்ளது. வெளிப் படையாகப் புலனகக் கூடியவற்றை மட் டுமே காணும் இயல்பு படைத்தவர்களின் கவனம், கண்களுக்குத் தெரியக் கூடியவை களின் மீதுதான் இயற்கையாகக் கூடுத லாய் லயிக்கிறது. இது கவிஞனின் பொல்லா விதி''

(குவாஜா ஹஸன் நிஜாமிக்கு எழுதிய கடிதத்திலிருந்து)

இக்பாலின் கருத்துக்களைப் புரிந்து கொள்ளக் கூடியவர் யாரும் இல்லாத காலம் ஒன்றிருந்தது. அவர் தாம் தன்னந் தனியராக இருப்பதாய் உணர்ந்தார். ஒருமுறை அவர் கூறினர்: ''லாஹூர் ஒரு பெரிய நகரமே எனினும் இப்பெருங் கூட்டத்திற்கு மத்தியில் நான் தனியாக இருக்கிறேன். மனந்திறந்து என் உணர்வு களை எடுத்துச் சொல்வதற்கு ஒருவர் கூட இங்கில்லை!''

''என் கட்டுப்பாடு என்னைப் பரிகசிக்
கிறது!
வெளியிடுவதிலேதான் தனிச் சுவையுண்டு
இரகசியத்தை எடுத்துச் சொல்வதற்கு
உற்றவர் எவரும் எனக்கிங்கு இல்லை''

''நகரம் எவ்வளவுக் கெவ்வளவு பெரி தாய் இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு உன் தனிமையுணர்வும் கூடுகிறது'' என்று

பேக்கன் பிரபு கூறுகிருர். நானும் லாஹூரில் அதே உணர்வைத் தான் அனுபவிக்கிறேன்.''

(6-10-11 தேதியிட்டு அக்பர் அலாஹாபாதீக்கு எழுதிய கடிதத்திலிருந்து)

''அஸ்ராரெ குதீ'' 1915-இல் வெளியிடப் பட்டது. தனிமையுணர்வு பற்றி அதிலும் கூட வந்துள்ளது. அது பின்வருமாறு :

மெழுகுவர்த்தி போல மற்றவர்களுக்காக
எரிந்துருகும் நான்
மெழுகுவர்த்தி போல் அழ என் அவை
யினர்க்குக் கற்பிக்கிறேன்
என்னிதயம் கடந்த காலத்தின்மீதும்,
கண் வருங்காலமீதும் பதிந்துள்ளன
அவையின் நடுவே தன்னந்தனியனுய்
அமர்ந்திருக்கிறேன்
இறைவா! இவ்வுலகில் என் உண்மை
நண்பன் எங்கே?
ஸீனுயின் மரமாவேன், என் மூஸா எங்கே?
தனியே எரிந்து, துடிப்பது மெழுகுவர்த்
திக்கு எளிதல்ல
ஆ! ஒரு விட்டில் கூட எனக்குகந்ததாய்
இல்லையே!
என் துயரில் பங்கு கொள்பவரை எத்தனை
நாள் நான் தேடுவது?
என் இரகசியத்தைச் சொல்லத் தக்கவரை
எத்தனை நாள் நான் தேடுவது?
பாலையில் பூத்திடும் மலராவேன் நான்
நிறைசபை நடுவே தனியனுய் தவிப்பவன்

இதற்குப் பிறகு, தனக்கு உற்ற நண்பர், இரகசியத்தைக் காப்பாற்றக் கூடிய நம்பிக் கைக்குரிய தோழர் கிடைக்க வேண்டுமென்னும் விருப்பத்தை அவர் இறைவனிடம் வெளியிடு கிருர் :

உன் திருவருள் எனக்கோர் உற்ற
தோழனைத் தரவேண்டும்
என்னியல்பின் இரகசியங்களை உணர்
பவனுய் இருக்கட்டும்
பித்தனுகவும் இருக்கட்டும்; அவன் அறிஞ
னுகவும் இருக்கட்டும்
இது அது வென்றெண்ணுத இயல்பினனுய்
இருக்கட்டும்
என் பேரின்பப் புலம்பலை அவன்
இதயத்துள் புகுத்திப்பின்
என் முகத்தை அவன் உள்ளப்
பளிங்கிலே பார்ப்பேன்

இக்பாலின் இப்பிரார்த்தனை ஏற்றுக்கொள் ளப்பட்டது. இறுதியில் இக்பாலுக்கு அவரு டைய அந்தரங்கங்களிலே பங்கு கொள்ளத்தக்க தோழர்கள் கிடைத்து விட்டனர்.

நிறைசபையில் நான் தனித்திருந்த
நாட்கள் சென்ருெழிந்தன
என் அந்தரங்கங்களை ஏற்கவல்ல நண்பர்
பலர் இன்றிங்கு உளர்

உண்மை என்னவெனின் கவிஞனுக்குள்ள எண்ணற்ற கஷ்டங்களில் ஒன்று, அவன் எதை யும் சொல்ல விரும்பும் போது, முதலில் தான் கையாள வேண்டிய மொழியையும் நடையை யும் பற்றிய எண்ணச் சுழலில் அவன் சிக்கிச் சுழல்வதாகும். தன்னுடைய கருத்தை விளக் குவது எளிதாக இருக்க வேண்டும் என அவன் விரும்புவதே அதற்குக் காரணம். தன் ஆழிய சிந்தனையாலும், மூளை உழைப்பினுலும், இதயத்தை ஈடுபடுத்துவதாலும், சொற்சிலம் பங்களினுலும் தான் விரும்பியதைப் படைக் கிருன். எல்லா சொற்களும் அகராதியில் இருப்பவைதாம். அவை தனிப்பட்ட எவருக் கும் சொந்தமானவையன்று. எனினும் கவிஞன் அவற்றைத் தனித்தன்மையோடு சிறப்பான முறையில் பயன்படுத்துவதன் மூலம் அச்சொற் களைத் தன்னுடையவையாக்கிக் கொள்வதோடு அவற்றின் மீது தன் முத்திரையையும் பதித்து விடுகிருன். அதற்கப்புறம் அவை அகராதிச் சொற்களாக இராமல் கவிஞனுக்குரியனவாகி விடுகின்றன. கவிதை படைப்பதில் மொழி, நடை பற்றிய சிக்கல்களில் கவிஞன் அகப் பட்டுத் தவிக்கும்போது சில களைப்பூட்டும் கட்டங்கள் வருகின்றன. அக்கட்டங்களைப் புறக்கணித்துவிட்டு நாம் எந்தக் கவிஞனுடைய படைப்பையும் சரிவரப் புரிந்து கொள்ள முடி யாது. ஒரு முறை இக்பால் அப்படிப்பட்ட அல்லலில் சிக்கித் தவித்தபோது பின்வருமாறு எழுதினர் :

''கவிஞனின் உள்ள உளைச்சலை சாதாரண மக்கள் உணர முடியாது. கவிதை அவர்களுக்குக் கிடைக்கும்போது அது முழுமைபெற்ற வடிவத்தில் வரு கிறது. சொற்களை அமைப்பதிலே உள்ளம் அனுபவிக்கக் கூடிய வேதனைகளையும், நெளிவு சுழிவுகளுக்காகப் படும்பாட்டை யும் அவர்கள் அறியமாட்டார்கள். நல்ல கவிதையைக் காணும்போது, அதற்காக யாரோ ஒருவர் சிலுவையிலறையப்பட்டுத் துன்பம் அனுபவித்திருக்கிருர் என்று தெரிந்து கொள்ளுங்கள். சிறந்த கவிதை யைப் படைப்பது என்பது பிறருக்காகத் தானே தண்டனையை அனுபவிப்பதாகும்''
(கிராமிக்கு எழுதிய கடிதத்திலிருந்து)

மற்றவர்களுக்காக இக்பால் தாமே துன்பம் அனுபவித்தார் என்பதில் சற்றும் ஐயமில்லை. அவர் படைப்பினங்களின் நாடி ஓட்டத்தையும் வாழ்க்கையின் இதயத் துடிப்பையும் சோதித்தறிந்து, தான் உணர்ந்தவற்றை உயிர்த்துடிப்பூட்டும் சொற்சித்திரங்களாகவும், கீதங்களாயும் பதிந்து தந்திருக்கிறார். கஸல் இயற்றுவதே அவருடைய கவிதைத் தொழிலின் துவக்கமாக இருந்தது. எனினும் கஸல் மன்னர் என்று பெயர் பெற வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு இருந்ததில்லை. அவ்வப்போது தோன்றும் எழுச்சிகளையும், வீணான கனவு போன்ற கற்பனைகளையும் பாட்டாக்குவதில் அவர் ஈடுபாடு கொள்ளாமல், விண்ணுச்சியில் பறந்து சஞ்சாரம் செய்யத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார். அதனாலேயே அவருடைய கண்களின் முன்பாக விரிந்து பரந்த வெளிகளும், இமயம் போன்ற அச்சமூட்டும் மாமலைகளும், வானைத் தொடும் சிகரங்களும் காட்சியளித்தன ; விண்மீன்களுக்கப்பால் செல்லவும் அவரின் உள்ளம் துள்ளித் துடித்துக் கொண்டிருந்தது.

இக்பாலுக்குத் தம் எழுத்தாற்றலின் மீது நம்பிக்கை தோன்றிவிட்ட பிறகு கஸல் இயற்றுவதோடு கூடவே பல்வேறு பாட்டு வகைகளையும் கையாள்வதில் கவனம் செலுத்தினார். டாக்டர் ஷஃபாஅத் அஹ்மத் கூறியுள்ளபடி, இக்பாலுக்கு ஆரம்பத்திலிருந்தே தமக்கென்று ஒரு குறிக்கோள் உண்டு, தாம் ஆற்ற வேண்டிய சிறப்புப் பணி உண்டு என்கின்ற உணர்வு ஏற்பட்டிருந்தது ; எனினும் அது என்னவென்பது பற்றி மட்டும் அவருக்குத் தெளிவில்லாமல் இருந்தது. நதிகளும், மலைகளும், சூரியனும், சந்திரனும், விண்மீன்களும் யாவுமே தம்முள் ஏதோ ரகசியத்தைப் புதைத்து வைத்துக் கொண்டிருக்கின்றன என்பதாக அவர் உணர்ந்து கொண்டிருந்தார். மெய்யைத் தேடும் முயற்சியில், தாம் காணும் பொருள்கள் ஒவ்வொன்றிடமும் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். ஒரு சமயம் மெழுகுவர்த்தியைப் பார்த்து, விட்டில் அதனிடம் ஆசைப்படுவதேன் என்று கேட்பார். அடுத்து வண்ணமலரை நோக்கி தமது பார்வை, ''அழகைக் கூர்ந்து நோக்கும் கண்ணின் பார்வையே யன்றி வேறல்ல'' என உரைத்து முகத்துதி செய்கிறார். அதனால் மகிழ்ந்து, மலர், தன்னிதயத்தின் ரகசியத்தை அவரிடம் செப்பிவிடக் கூடும் என்று அவர் எதிர்பார்க்கிறார் போலும் ! மற்றொரு சமயம், ஹிமாலயத்தைப் பார்த்து அவர், ''பாவனைகளான மேற்பூச்சுக்களால் களங்கப்படுத்தப் படாத'' எளிமையான கோலத்தில், அது நிலை பெற்றிருப்பது எங்ஙனம் என்று அதன் வாய்மொழியாகவே கேட்க விருப்பம் தெரிவிக்கிறார். ''மண்ணறையில் உறங்குவோர்'' பக்கமாகக் கடந்து செல்லும் போதும் கூட அவர்களின் நிலை என்ன என்று கேட்க அவர் தயங்குவதில்லை. அவரால் விளிக்கப்படும் பொருள்கள் யாவும் சமிக்ஞைகளின் மூலமாகவே அவருடன் பேசத் தொடங்கி, ஒன்றில்லா விட்டால் ஒன்றாக ஏதாவது செய்தியைத் தெரிவித்து விடும்.

''முடிவில்லாத் தேட்டம்'' பற்றிய பாடம் அவருக்கு எங்கிருந்தோ கிட்டுகிறது என்றால் ''நிரந்தர அழகு'', 'ஒன்றும் பலவும்' ஆகியவை குறித்த இரகசியங்களின் விளக்கம் வேறு எங்கிருந்தோ அவருக்குக் கிடைக்கிறது. இன்னுமோரிடத்தில் அழகின் சோக முடிவு கண்டு அவர் நடுக்குறுகிறார். அப்படியெல்லாம் இருந்தும் அவற்றிற்கிடையே ஒட்டுறவு எதுவும் இருப்பதாக இன்னும் அவருக்குத் தோன்றவில்லை. ஒவ்வொரு பொருளும், ஒன்றோடொன்று தொடர்பின்றி இருப்பதாகவும் வெவ்வேறான செய்திகளை அளிப்பதாகவும் அவருக்குப் படுகிறது. இப்பன்மைக்கு மத்தியில்தான் அவர் அந்த 'ஒன்றை'த் தேடினார். அது அவருக்கு ''உள்ள அமைதியின் ஊற்று'' மட்டுமல்லாமல் ''உலகிற்கு ஒளியூட்டும் விளக்கு''ம் ஆகும். இப்படி அங்குமிங்கும் ஓடுவதும், இந்த நாடோடித் தனமும், இந்தத் தவிப்பும் அவரைத் தகித்துக் கொண்டிருந்தன. எந்த வகையிலும் அவருக்கு அமைதி கிட்டவில்லை. ''நதியின் ஒடுக்கம் பற்றிய பரிதாப''த்தை விட்டு தூர விலகி, ''சமுத்திரத்தின் பரப்பை விட்டுப் பிரிந்திருப்பது பற்றிய வேதனை''யில் ஆழ்ந்திருந்தார். ''எந்நேரமும் தாபமும் வேட்கையும்'' ஆகவுள்ள இந்த வாழ்க்கையைக் கண்டு சில சமயங்களில் அவர் அஞ்சுவார் ; ''உருக்கும் வேட்கை எதுவும் இல்லாது'' வாழும் மலரின் நல்விதியைக் கண்டும், 'சபையலங்காரம்' ஆக இருந்தும் அது ''கூட்டத்தின் சந்தடியில் பங்கு பெறாது'' இருப்பது குறித்தும் அவர் பொறாமையுறுவார். சில பாடல்களைப் படிக்கும் போது, கவிஞரின் இயல்பிலே ஓரளவு அமைதியின்மையும் சஞ்சலமும் இருப்பதாகத் தோன்றுகிறது. இதுவரை அவருக்குக் கிட்டாமலிருந்து அவர் தேடிக் கொண்டிருப்பது யாது ? எங்கு உள்ளது என்றறிந்திட இயலாமல் அவர் இன்னும் தேடிக் கொண்டே இருப்பது எதனை ? அவர் முன்பாகச் சில சிக்கல்கள் உள்ளன. அவற்றை சிக்கறுக்க விரும்புகிறார். ஆனால் எங்கு துவங்குவது என்று தான் அவருக்குத் தெரியவில்லை. அவரின் உள்ளத்தில் திரும்பத் திரும்ப கேள்விகள் எழுகின்றன. எனினும் அவற்றிற்குத் திருப்தியான விடை கிடைப்பதில்லை. பித்தம் முற்றிய வேகத்தில், ''கங்கை நதிப் பரப்பி'' னிடம், தன்னை அணைத்துக் கொண்டு, அதற்குள் ஆழ்த்தி விடுமாறு விண்ணப்பிக்கின்றார்.

இதுவரை, அவருடைய பாட்டு, ''ஜிப்ரீலின் கலேப்பு'' தோற்றுவித்ததாக இல்லாமல் ''வேத ஆனக்குரல்'' ஆக மட்டுமே இருந்தது. எனினும் அவர் தம்மைத் தாமே நிராசைக் கடலில் மூழ்க விடவில்லை. அவர் தம் இறக்கைகளின் பறக்கும் சக்தியை சோதித்துக் கொண்டும் திருப்திப் பெருமூச்சு விட்டுக் கொண்டும் இருந்தார். கரு மேகங்கள் சூழ்ந்த அக்காரிருளில் சிற்சில சமயங் களில் அவர் முன்பாக மின்னல் தோன்றி மறையும். மிகப் பல துன்ப வேதனைகளுக்கு மருந்து, 'வேட்கையின் இன்ப வேதனை'யில் துடித்தவராக, நொடிநேரமும் நிம்மதி என் பதை உணராதவராக வாழ்ந்த ஹஜ்ரத் பிலால் (ரலி) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்று வதில் உள்ளது என்று அவர் கண்டார். அது போன்ற சந்தர்ப்பங்களில் ''மிகமிகச் சிக்க லான பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு, ''பயனற்ற உழைப்பி''லும் ''ஒரு நூறு அறுவடை கண்ட இன்பம்'' அனுபவித்தார்.

இந்தக் காலகட்டத்தில் தான் இக்பால், ''தரானயெ ஹிந்தீ'', ''மேரா வத்தன் வஹீஹை'' போன்ற தேசீய கீதங்களை எழு தினர். நாட்டில் நிலவிய பூசல்களை வெறுத் தார். அன்னை நாட்டின் புதல்வர்களுக்கிடையே நிலவிய ஒற்றுமையின்மை அவருக்குக்கசந்தது. அவர் திரும்பத் திரும்ப தம் நாட்டு மக்களை உசுப்பி விட்டு ''தாய் நாட்டினை பேராபத்து சூழ்ந்து கொண்டு வருகிறது. அதன் அழி வுக்கு பரமண்டலத்தில் திட்டம் தீட்டப் படு கிறது'' என்று எச்சரித்தார்.

அறியாதவனே, தாய்நாட்டைப் பற்றிக்
கவலைகொள், ஆபத்து வரப் போகிறது;
உன் அழிவுக்கான திட்டங்கள் வானுலகிலே
வகுக்கப் பெற்று வருகின்றன''

அவர், சிதறிய அந்த மணிகளை ஒன்று கோக்க விரும்பினர். அவருடைய முயற்சி வெற்றி பெருத பட்சத்தில், அவர் செய்ய எண்ணியது :

''விசுவாசத்தின் வண்ணத்தை அனைவர்க்
கும் காட்டிடுவேன்.
இந்தியாவே, என்னுயிரை உனக்காகப்
பலியிடுவேன் !''

அதாவது, அக்காலத்திய தவிப்பும், அமைதியின்மையும், வேதனையும், விசாரமும் எல்லாம் வரவிருந்த தத்துவ நிலைக்கும் தெளி வமைதிக்கும் அவசியமான முன்னேடியாக இருந்தன. ஐரோப்பாவிற்குச் சென்று, ''என் பார்வையின் தீட்சண்யம் மூல உண்மையையே ஊடுருவிச் சென்றது'' என்று இக்பால் உரிமை கொண்டாடத்துணியுமளவுக்குத்தகுதியடையக் கூடிய நிலையே அது. அவரின் ''வேட்கை கீதத்தினுல் இறை திருச்சமுகத்தில் சலசலப்புத் தோன்றியது'' ''சகுண வணக்கத்தலங்களில், 'காப்பாற்றுங்கள்' என்னும் அபயக் குரலொலி கள்'' எழுந்தன. இயற்கையின் தோற்றங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் இரகசியத்தைச் சுமந்து கொண்டிருந்தன. அன்பும் அழகும் தனிச் சிறப்புகள் ததும்பி வழிவனவாக அவ ருக்குத் தோன்றின. உண்மையில், அன்பு, அழகு இரண்டுமே ஒன்ருக இணைந்து கொண்டே வந்தன. படிப்படையாக, ஒவ்வொரு பொரு ளுமே காதலின் செய்தியைச் சுமந்து வரும் தூதாகவே காட்சியளித்தன. எனினும் இக் காதல் வெறும் காதலாக இருப்பதோடு மட்டும் நில்லாது, செயலூக்கத்தையும் போதித்தது. ''வலிமையற்ற எறும்பு'' இடமிருந்து ''ஊர் தலின் இன்பம்'' பற்றித் தெரிந்து கொண்டார். சந்திரனும் கூட,

நடந்து கொண்டிருந்தவர்கள் முன்னேறிச்
சென்று விட்டனர்.
பின்தங்கியவர்கள் மிதிபட்டுப் போயினர்
என்று அதே செய்தியைத் தெரிவித்தது.

தோல்வியும் மரணமும் அவருக்குப் பொரு ளற்றவையாகத் தோன்றின. இவை செய லாற்றுவதற்குத் தடையாக இருக்க முடியாது என்னும் நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டிருந்தது.

அவர் ஐரோப்பா சென்றபோது, அங்கு சுதேசப்பற்று மக்களின் கண்களை தன்னல ஆர்வம் என்னும் பட்டியால் கட்டி மறைத்திருக் கிறது, அதன் விளைவாக அவர்களுக்கு மற்ற நாடுகளின், சமுதாயங்களின் துன்ப, துயரங் களில் அக்கறையில்லாமல் போய்விட்டது என் பதும் தெரிய வந்தது. உலகம் முழுவதிலு முள்ள செல்வங்கள் அனைத்தையும் சுரண்டிக் கொண்டு போய்த் தம் வீடுகளில் நிரப்பிக் கொள்ள வேண்டும் என்றே அவர்கள் இரவும் பகலும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர். ஐரோப்பியர்களின் இந்த தன்னலப் போக்கு அவருடைய உள்ளத்தைப் பெரிதும் வருத் தியது. உலக மக்கள் அனைவரும் ஒரே குடும் பத்தின் உறுப்பினர்கள் என்னும் போது அவர் களிடையே ஏன் இவ்வளவு ஏற்றத்தாழ்வு இருக்க வேண்டும் என்ற சிந்தனை அவருள் எழுந்தது. இந்த சுரண்டல், கொள்ளை எது வரை நீடிக்கும்? ஐரோப்பிய சமுதாயங்களின் முன்பாகத் தோற்றமளித்துக் கொண்டிருக்கும் இந்த இலட்சியம் தானு மனிதவாழ்க்கையின் குறிக்கோள் ?

அவரின் இப்படிப்பட்ட மனஅமைதிக் குலேவு அந்தக் கால கட்டத்தைச் சேர்ந்த பல பாடல்களில் தெளிவாகத் தெரிகிறது. உதாரணமாக, ஒரு பாடலில் அவர்,

இயற்கையின் இக்கொடுமை விசித்திர
மானது ;
இரகசியத்தைத் தெரியத் துடிப்பவனுகை
மனிதனே ஆக்கிவிட்டு,
இரகசியத்தை அவன் கண்களை விட்டு
மறைத்தது.
அறியும் ஆவல் அளவு கடந்துள்ளது
வாழ்வின் ரகசியமோ விளங்குவதாக இல்லை.

வேறு பாடல்களிலும் ஆங்காங்கே இத்தேட்டமும் வேட்டலும் குறிப்பிடப் பெற்றுள்ளன. சான்ருக,

எப்பொருளும் மறைக்கப் பட்டிருக்க
வில்லையெனின், தேட்டத்தின் உருவாக
நானிருப்பதேன்
கண்கள் காட்சிக்கு ஏங்குகின்றன ;
உள்ளத்திற்கோ தேடிவிசாரிப்பதே
தொழிலாக இருக்கிறது.

மெல்ல மெல்ல இச்சிக்கல்கள் தாமாகவே விடுபடலாயின. திரைகள் விலகின. இரகசியங்கள் தெளிவாகத் தொடங்கின. உள்ளத்தில் அடிக்கடி தலைகாட்டிக் கொண்டிருந்த கேள்விகளுக்கு விடைகள் கிடைக்க ஆரம்பித்தன. கவிஞரின் குழம்பிய உள்ளத்தில் ஓரளவு அமைதி தோன்றியது.

இக்கால கட்டத்தின் பிற்பகுதியைச் சேர்ந்த பாடல்களில் இப்பிரச்னைகளுக்கு முழுமையான விடைகள் காணப்பட வில்லை எனினும் ஆங்காங்கே சமிக்ஞைகள் தென்படவே செய்கின்றன. ஐரோப்பியர்களின் இத்தகைய சுயநலப் போக்கும் அகங்காரமும் இப்படியே நீடிக்குமா என்ற கவலையே அவருக்கு மற்றெல்லா வற்றையும் விட அதிகமாக இருந்தது. இறைவனுக்குரிய பூமியில் சுரண்டலும் கொள்ளையும் இப்படியே நீடித்துக் கொண்டிருக்குமா? எளியோர் மீது வலியோரின் கொடுமை இவ்வாறே நீடிக்குமா ? இத்துன்பங்களிலிருந்து உலகைக் காப்பதற்கு எந்த வழியுமே கிடையாதா ? எனினும், இஸ்லாமிய போதனைகளின் பால் அவர் கவனம் செலுத்திய போது அவருடைய கவலை தானுகவே மறைந்தது. இந்த நிலை விரைவிலேயே மாறும் என்று அவருடைய உள்ளம் சொல்லிற்று. காலம் மாறும். மனிதர்களின் கண்கள் கூசும் படியாக நாகரிகத்தின் மீது பூசப்பட்டுள்ள இந்தத் தங்க முலாம் தானே கலைந்து விடும். இஸ்லாத்தின் கொள்கைகள் நாடுகள் தோறும் பரவும். நெடுங்காலமாக உள்ளங்களில் அழுந்திக்கிடக்கும் எண்ணங்கள் ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு கடை வீதியிலும் ஒலிக்கத் துவங்கும். இந்த சிந்தனைகளை அவர் தம் பாட்டொன்றிலே மிகுந்த உணர்ச்சியோடு இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் :

மேலைநாடுகளில் வாசம் செய்வோரே,
இறைவனின் இவ்வுலகம் சந்தைக்
கடையன்று.
சுத்தத்தங்கமென நீங்கள் நினைப்பது
மாற்றுக் குறைந்து மதிப்பிழந்துவிடும்
உங்களின் நாகரிகம் தன் குற்றுவாளால்
தற்கொலை செய்து கொள்ளும்
மெல்லிய கிளை மீது கட்டப்படும் பறவைக்
கூடு நிலைப்பதில்லை.

இப்பாட்டின் மற்றுமோர் ஈரடியில், முஸ்லிம்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பி வீழ்ந்து கிடக்கும் தம் சமுதாயத்தைத் தூக்கிவிட்டு நிமிர்ந்து நிற்கச் செய்வதற்காகத் தம் கவிதா சக்தி முழுவதையுமே செலவிட வேண்டுமென்று இக்பால் மேற்கொண்ட முடிவு வெளிப்படுகிறது.

இரவின் காரிருளில், களைத்துக் கிடக்கும்
என் பயணக்கூட்டத்தை அழைத்துக்
கொண்டு புறப்படுவேன்
என் பெருமூச்சு தீப்பொறிகளாக வரும்,
என் உள்ளத்திலிருந்து நெருப்புச்
சுவாலை வெளிப்படும்.

இப்படி நினைத்த பிறகு அவர், முஸ்லிம்களின் சிந்தையில் ஏற்பட்டு விட்டிருந்த கோணலை நேர் செய்யவும், அடிமைத் தனத்திலிருந்து அவர்களை மீட்சி பெறச் செய்யவும் செயல் திட்டம் ஒன்றைத் தீட்டிக் கொண்டு, தம் சமுதாயத்திற்கு இப்படி அழைப்பு விடுத்தார் :

உலக அவையின் நடுவே மெழுகு
வர்த்தியாய் இருப்போம்
நாம் எரிந்து பிறர் கண்கள் பார்ப்பதற்கு
உதவிடுவோம்.

முஸ்லிம்களின் எதிர்காலம் பெருமை மிக்கதாய் இருக்குமெனவும் அதுவே வருங்கால உலகின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் என்றும் அவருக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. ஏகத்துவம், சகோதரத்துவம், செயலூக்கம், வேட்கை ஆகிய பாடங்களை அவர் தம் சமுதாயத்திற்கு போதித்தார்.

காரணத்திற்காகவே ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு முடிவுக்கு வருவது அவசியமாகும். நான் எந்த முடிவுக்கு வந்திருக்கிறேனே அது, பெரும்பாலான கிழக்கத்திய நாடுகளின் இன்றைய மனப்பாங்கிற்கும் போக்கிற்கும் எதிரிடையானது எனினும், அது, கீழ்த்திசையைச் சேர்ந்த ஞானிகள் முன்பே அறிந்திராத ஒன்றல்ல. அதோடு, மேற்கத்திய தத்துவ ஞானத்தின் ஆதிக்கமே என்னை இந்த முடிவுக்கு வரச் செய்தது என்று கூறுவதும் முழுக்க முழுக்கத் தவருகும்''

(மஹாராஜா கிஷன் பிரசாதுக்கு 10-5-16 தேதியில் எழுதிய கடிதத்திலிருந்து)

இந்தக் கட்டத்திற்கு இக்பால் வந்தபோது, தம் வாழ்க்கையில் தாம் நிறைவேற்ற வேண்டிய சிறப்புப் பணி (mission) உண்மையில் யாது என்பது அவருக்கு தெளிவாகி விட்டது. தம்முடைய இந்த தூது வெற்றி பெறும் என்று அவருக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அதனல்தான் 14-4-16 தேதியில் மஹாராஜா கிஷன் பிரசாதுக்கு எழுதிய மற்ருெரு கடிதத்தில் இவ்வாறு கூறுகிருர் :

''அஸ்ராரெ குதீ'' என்னும் பெயர் கொண்ட இந்த மஸ்னவீ ஒரு குறிக்கோளை முன்வைத்து எழுதப்பட்டிருக்கிறது. என் சுபாவமும் என் இயற்கையும் ஆத்ம ஞான ஈடுபாடுகளில் லயித்து, பேரின்பத்தில் மூழ்கி தன்னை மறந்திருப்பதை விரும்புபவை தான். எவன் வசம் என் உயிரும், என் ஆஸ்தியும், என் மானமும் உள்ளனவோ அந்த ஏக நாயனின் மீது ஆணையாக, நான் இதனை என்னிச்சையாக எழுதவில்லை ; ஆனல் அதை எழுதுவதற்கான வழிகாட்டுதல் எனக்குக் கிடைத்தது. இத்தகைய விஷயத்தை எழுதுவதற்காக நான் ஏன் தேர்ந்தெடுக்கப் பட்டேன் என்பது எனக்குத் திகைப்பூட்டுவதாக உள்ளது. அதன் இரண்டாம் பாகம் (''ருமூஸெ பேகுதீ'') பூர்த்தியடையாத வரையில் என் உள்ளத்திற்கு அமைதி கிட்டப் போவதில்லை. இப்போதைக்கு என் கடமை இது ஒன்று தான், என் வாழ்க்கையின் உண்மையான நோக்கமும் இதுவே என்ற உணர்வு தான் ஏற்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தோன்றும் என்று எனக்குத் தெரிந்தே இருந்தது. ஏனெனில் நாம் அனைவரும் வீழ்ச்சிக் காலத்தில் பிறந்திருப்பவர்கள். வீழ்ச்சியின் மாபெரும் மந்திரசக்தி என்னவெனின் அது தன் அனைத்து உறுப்புக்களையும், சாதனங்களையும், காரணங்களையும் தன் வேட்டைக்கு (அது ஒரு சமுதாயமாகவோ அல்லது தனி மனிதனுகவோ இருக்கலாம்) விரும்பத்தக்கவையாகவும் கவர்ச்சிகரமானவையாகவும் காண்பிப்பதும் அதன் விளைவாக துரதிருஷ்டம் பிடித்த அவ்வேட்டைப் பலிகள், தம் அழிவுக்குக் காரணமாக இருக்கக் கூடியவைகளையே தம்மைக் காப்பாற்றி போஷிக்கக் கூடியவை என்று நினைக்கச் செய்வதும் ஆகும். எனினும்,

'' நானே நாளைய கவிஞனின்
குரலாவேன் ''

மேலும்,

''என் பழைய நண்பர்களின் மீது
எனக்கிருந்த நம்பிக்கை அகன்று
விட்டது
என் தூர்ஸீனவை எரிய வைத்திருக்
கிறேன், மூஸா வரட்டும் என்று''

எதிர்ப்போரும் இருக்கப் போவதில்லை. இக்பாலும் இருக்கப் போவதில்லை. உயிரற்ற நிலத்தில் இக்பால் விதைத்துள்ள வித்தானது முளைவிடும். நிச்சயமாக முளைக்கும். எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கூட அது காய்த்துப் பலன் தரும். எனக்கு அந்த வாழ்வு வாக்களிக்கப்பட்டுள்ளது. புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே.

நம் உள்ளங்களினுள்ளே புகுந்து, நம் இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்து ஓடத் துவங்கி விட்ட இக்பாலின் செய்தி இதுவே. நெடுங்காலமாக உறங்கிக் கிடந்த சமுதாயம் உணர்வு பெற்றெழுந்தது. அதனுள் புத்துணர்வும் தன்னம்பிக்கையும் வீறுற்று விழிப்புற்றன. அன்னியர் அதற்குப் பூட்டியிருந்த அடிமைத் தளையைக் கழற்றி எறிந்து, சுதந்திரம் பெற்று, அது வலிமையையும் அரசுரிமையையும் அடையப் பெற்றது. சுதந்திர சமுதாயம் என்ற நிலையிலும் கூட நம் நோக்கமும் இறுதி லட்சியமும் கவிஞர் அனுபவித்த அதே உணர்வுகளை நாமும் சிந்தையில் ஏற்பதும் இக்பால் நமக்களித்த செய்தியை செயலளவில் நிறைவேற்றுவதுமாக இருக்க வேண்டும்.

———

புது தில்லி பாக்கிஸ்தான் தூதரகத்தின் செய்தித்துறை வெளியீடு.
அச்சிட்டோர் : ஜி. ஸி. பிரிண்டர்ஸ், 2141, எம். பி. ஸ்ட்ரீட், தர்யாகஞ்சு,
புது தில்லி—110002. போன் : 272453